Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1283)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 20 வெள்ளிக்கிழமை (03.02.2012) பக்கங்கள் 16 ஓசை – 125




கியூபாவின் உண்மைகள்

07



விளையாட்டு மைதானத்தில் 74 பேர் பலி

13




ஒரு ஆசிரியர் ஒரு பள்ளிக்கூடம்...

14



13 + மக்களுக்கு கவலை இல்லை

08

### காங்கேசன் எரிபொருள் களஞ்சியத்தில் சக்திவாய்ந்த வெடி குண்டு மீட்பு

வலி. வடக்கு காங்கேசன் துறையில் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந் திருக்கும் எரிபொருள் களஞ்சியசாலைக்கு மிக அண்மையில் இருந்து பெற்றோ லியக் கூட்டுத்தாபன ஊழியர்களால் பாரிய வெடி குண்டொன்று மீட்கப்பட் டுள்ளது. இலங்கையின் சுதந்திர தினத் தைக் கொண்டாடுவதற்காக நேற்று முன் தினம் புதன்கிழமை அங்கு மேடை அமைப்பதற்கு மண் வெட்டிய போது நிலத்தின் கீழ் புதையுண்ட நிலையில் காணப்பட்ட இந்தக் குண்டு மீட்கப்பட்டுள் ளதாக காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு விவசாய விருத்திக்கு ஐ.நா.உதவி;

# ரோம் நகரில் ஒப்பந்தம் கைச்சாத்து



(ரோம்)

வடக்கின் விவசாய அபிவிருத்திக்கான ஐ.நா.வின் விசேட உதவித்திட்டத்தை நடை முறைப்படுத்தும் வகையிலான ஒப்பந்தம் ஒன்று இத்தாலி நாட்டின் ரோம் நகரில் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

மேற்படி ஒப்பந்தத்தின்படி, வட மாகா ணத்தின் விவசாயத்துறை அபிவிருத்திக் காக ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியம் 22.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் வட மாகாண மக்களின் விவசாய உற்பத்திகளை அதிகரிக்கவும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பிலான உடன்படிக்கை ஒன்று இத்தா லியில் உள்ள இலங்கை தூதுவர் அசித்த பெரேரா வுக்கும் சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியத் தின் தலைவர் கன்யானுக்கும் இடையில் ரோமில் வைத்து கைச்சாத்திடப்பட்டுள்ளது.

## ஜெனீவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான வியூகம்



### இந்தியாவின் ஆதரவு எந்தப்பக்கம்



(கொழும்பு)

இம் மாத இறுதியில் ஜெனீவாவில் இடம்பெறவிருக் கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் மேற்கொள்ளப்படவிருப்பதாகக் கூறப்படும் இலங்கைக்கு எதிரான மேற்குலக நாடுகளின் தீர்மானத்துக்கு இந்தியாவின் ஆத ரவைப் பெறுவதற்குத் தீவிர முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

அமெரிக்காவின் ஆதரவுடன் கொண்டு வரப்ப டவுள்ள இந்தத் தீர்மானம் தொடர்பாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி. எல்.பீரிஸுக்கு கடந்த வெள்ளியன்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் அதிகார பூர்வமாக தெரியப்படுத்தியிருந்தார். இந்தத் தீர்மானத்துக்கு இந்தியாவும் ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாக உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு நாளி தழ் ஒன்று

(15ஆம் பக்கம் பார்க்க)

## இளம் குடும்பஸ்தர் மரணம் கோண்டாவிலில் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்குப் பகு தியில் வேப்பமரத்தை வெட்டும் வேலையில் ஈடுபட்டிருந்த குடும் பஸ்தர் ஒருவர் 35 அடி உயரத் தில் இருந்து வேப்பமரக்கிளை முறிந்து வீழ்ந்ததில் பரிதாபகர மாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் கோண்டாவில் கிழக்கு, குமர கோட்டம் பகுதியில் உள்ள காணியொன்றில் கூலிக்காக வேப்பமரமொன்றை வெட்டும் வேலையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத் தியசாலையின் அவசர சிகிச் சைப் பிரிவில் அனுமதிக்கப்பட் டிருந்தார். எனினும் அங்கு சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் இரவு 8.30 மணிக்கு அவர் மரண மானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இணுவில் கிழக்கைச் சேர்ந்த மார்க்கண்டு சற்குணம் (வயது-42) (15ஆம் பக்கம் பார்க்க)

### மாணவன் சடலமாக மீட்பு

#### இருபாலையில் சோகம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை சி.சி.பாடசாலையில் ஆண்டு ஐந்தில் கல்வி பயின்று வந்த மாணவன் ஒருவன் இருபாலைப் பகுதி யில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து சடலமாக நேற்று முன்தினம் பிற்பகல் கோப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டார்.

இருபாலை கிழக்கு நாச்சிமார் கோவில் பகுதியில் வசித்து வந்த நாகராசா நிக்சன் (வயது-10) என்ற மாணவனே இவ்வாறு கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, சம்பவதினம் குறித்த மாணவன் பாடசாலை சென்று விட்டு வீடு திரும்பியிருந்த நிலையில் பிற்பகல் ரியூசன் வகுப்பிற்குச் செல்வதற்காக முகம் கழுவுவதற்கு கிணற்றடிக்குச் சென் றுள்ளார். நீண்ட நேரமாகியும் அவர்

(15ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு அங்கம் வகிக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை



(ஊர்காவற்றுறை)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக அரசு அமைக்க விருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் பங்குபற்ற வேண்டும்.

இத் தெரிவுக் குழுவில் ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அங்கம் வகிப்பதனூடாகவே தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரமானதும் உறுதியா னதுமான இறுதித் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். ஊர்காவற்துறையில் புதிதாக கட்டப்பட்ட பிரதேச சபை தலை மைக் காரியாலயத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு ஜனநாயக நாட்டில் பல்வேறு கருத்துக்கள் (15ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுக்கு தனி மாகாணசபை கோருகிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களை ஒன் றிணைத்து தென்கிழக்கு மாகாண சபை என்ற புதிய மாகாண நிர்வாக அமைப்பை உருவாக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புதிய கோரிக்கை ஒன்றை முன் வைத் துள்ளது.

இந்த மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகா ரங்களும் வழங்கப்பட வேண்டும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளி யிட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலர் ஹசன் அலி, மாகாணசபைக ளுக்கு 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அதிகாரங்களை வழங்குவதை ஸ்ரீலங்கா முஸ்லிம

(15ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.கொட்டடியில் ஹெரோயின் அதிரடிச் சோதனையில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் தொடர்ச்சியாக ஹெரோயின் போதைப் பொருட் களை விநியோகித்து வருபவர் என்று சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவர் யாழ்.கொட்டடிப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### மதுபோதையில் தீக்குளிப்பு ஆறுகால்மடத்தில் பரபரப்பு


(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் தனது மனைவிக்கு சாகசம் காட்ட முயற்சித்த இளைஞர் ஒருவர் தீயில் எரிந்து கருகியுள்ளார்.

மதுபோதையில் வீட்டுக்கு வந்து தனது மனைவியுடன் வாக்கு வாதம் புரிந்த இந்த இளைஞர் தீக்குளிக்கப் போவதாக சவால் விட்டிருக்கிறார். தனது தலையில் மண்ணெண்ணையை ஊற்றித் தனக்குத்தானே தீ மூட்டியும் உள்ளார்.

இச்சம்பவம் ஆறுகால்மடம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் எஸ்.சுரேஸ்குமார் (வயது-35) என்ற இளைஞர் படுகாயமடைந்துள்ளார். இவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன. (எஸ்)

# சமுர்த்தி உதவித்திட்டம் மூலம் நெடுந்தீவில் வாழ்வாதார உதவிகள்



(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் சமுர்த்தி வாழ்வாதார உதவிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டுப்பொருட்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு நெடுந்தீவு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில், பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது. இந் நிகழ்வில் சமுர்த்தி உதவியினைப் பெற்றுக் கொள்ளும் 135 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக விவசாய உபகரணங்களும், கடற்றொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டன. மேலும் திவிநெகும வேலைத் திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றியீட்டிய 10 பேருக்கு சான்றிதழும் பரிசிலும் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சில்வேஸ்திரி அலென்ரின், கௌரவ விருந்தினராக நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல றெக்சியன், நெடுந்தீவு கடற்படை கட்டளை அதிகாரி கொமாண்டர் கரிந்திர எக்கநாயக்க, நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் எ.டபிள்யு.அரிய நாயகம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதேவேளை, சர்வதேச சிறுவர், முதியோர்தினப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசிலும் வழங்கப்பட்டன. தொடர்ந்து நெடுந்தீவு மத்தி மேற்கு தோமையார் ஆலயத்துக்கான ஒலிபெருக்கிச் சாதனத் தொகுதியும் வழங்கப்பட்டதோடு நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு நிதியில் இருந்து பெருக்கடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திற்கு ரூபா ஒரு இலட்சம் காசோலையும் வழங்கப்பட்டது. மேலும் கடந்த மாதம் நடைபெற்ற தேசிய பொங்கல் விழாவில் மூன்றாம் இடம் பெற்ற நெடுந்தீவு பிரதேச செயலகத்தை சேர்ந்த கிராம அலுவலர் ப.கதிரேசன் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# "மீண்டும் நங்கூரம்"

பசுமை அமைதி விருதுகள் பரிசளிப்பும் நங்கூரம் சமூக அறிவியல் ஏடு வெளியீடும் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வடமாகாணம் தழுவிய சூழல்சார் பொது அறிவுப் பரீட்சை அண்மையில் நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கே பசுமை அமைதி விருதுகள் வழங்கப்படவுள்ளன.

சமூக அறிவியல் ஏடான நங்கூரம் இருமாத இதழாக மீண்டும் வெளியிடப்படவுள்ளதாகவும் இதன் ஆண்டு சந்தா தபாற் செலவுடன் ரூபா 500 எனவும் சூழலியலாளர் பொ. ஐங்கரநேசன் அறிவித்துள்ளார்.

# நிறுவுநர் நாளும் சஞ்சிகை வெளியீடு

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நாளும், தாமோதரன் சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிர தம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் வழங்குவார். தாமோதரன் சஞ்சிகைக்கான வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரன் வழங்குவார்.

# ஒன்பது இலட்சம் நோயாளருக்கு சிகிச்சை யாழ். போதனா மருத்துவமனை சாதனை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு யாழ் போதனா வைத்தியசாலையில் விடுதிகளில் தங்கியிருந்தும், வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவிலும், கிளினிக் பிரிவிலும் ஒன்பது இலட்சத்து 30 ஆயிரத்து 118 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் புள்ளிவிபரமொன்று தெரிவித்துள்ளது.

இதில் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு 115842 நோயாளரும், வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் 282946 நோயாளரும், ஏனைய சிகிச்சைப் பிரிவில் 531330 நோயாளரும் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் அந்தப் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

காய்ச்சல், இருமல், தலைவலி, தடிமன், சளி, போன்ற நோய்களுக்கு சிகிச்சை பெற்றவர்களே இதில் அதிகம் எனவும் அந்தப் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அதில் தைபஸ், தைபோயிட், டெங்கு, மலேரியா, போன்ற நோய் காரணமாக 1050 நோயாளரும், புற்றுநோய் காரணமாக 1145 நோயாளரும் சிகிச்சை பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (பா)

# நீர்வேலிக் கந்தன் ஆலயத்தில் திருட்டு

நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் மூலஸ்தானத்திற்குள் கடந்த செவ்வாய் இரவு புகுந்த சில விஷமிகள் ஆலய விக்கிரகங்ளைப் புரட்டி அதன் கீழே இருந்த தங்கத்தாலான இயந்திரத் தகடுகளைக் களவாடியுள்ளனர்.

இரவோடு இரவாக நீண்ட நேரம் தங்கியிருந்து இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது எனப் பலரும் கவலை தெரிவித்தனர். கந்தசுவாமி கோவிலில் நிகழ்ந்த இச்சம்பவம் முருகனது அடியவர்கள் மனதில் பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது.

# காரைநகரில் தொழிற் பயிற்சி இளைஞர் யுவதிகளுக்கு வாய்ப்பு

(ஆனைக்கோட்டை)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் காரைநகரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் புதிய பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளது.

இதில் முச்சக்கரவண்டி திருத்துதல், தையல் வேலை, வெல்டிங், கட்டுமானப் பயிற்சி, ஆகிய பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள விரும்புவோர் தமது விண்ணப்பங்களை பொறுப்பதிகாரி, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, தொழில் பயிற்சி நிலையம், வலந்தலை, காரைநகர் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் அறிவித்துள்ளார். (104)

# கீரிமலை முத்துமாரி அம்பாள் பாலஸ்தான நிகழ்வு

கீரிமலை ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் ஆலய பாலஸ்தானம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக கிழமை கிரியைகள் ஆரம்பமாகி 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரை நடைபெறவுள்ளது.

நிகழ்வுகள் ஆலய பிரதம குரு சிவசிறி ந.உமாபதிஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். வருடாந்த மஹோற்சவ அபிசேக பூசைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்தகால போர் அனர்த்தத்தின்போது மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இவ் ஆலயம் 21 வருடங்களாக பூசைகள் இன்றி இருந்தது குறிபிடத்தக்கதாகும்.

ஆலய புனருத்தாரண வேலைகளுக்குப் பங்களிக்க விரும்புவோர், கீரிமலை முத்துமாரியம்ம்ன் தேவஸ்தான புனருத்தாரணசபை, கீரிமலை, காங்கேசன்துறை, இலங்கை வங்கி, சுனனாகம் 72218558 என்ற வங்கிக் கணக்கில் தமது உதவிகளை வழங்க முடியுமென ஆலய புனருத்தாரண சபையினர் அறிவித்துள்ளனர்.


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1285)


# புதிய பஸ் சேவை ஆரம்பம் கிளாலி பயணிகளுக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலி மற்றும் எழுதுமட்டுவாள் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க கிளாலியிலிருந்து எழுதுமட்டுவாள் ஊடாக யாழ்ப்பாணம் வரையான சிற்றூர்தி சேவையினை தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சங்கத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

கிளாலியிலிருந்து காலை 6.30 மணிக்கு பாடசாலை சேவையும், முறையே காலை 7.30 மணி மற்றும் பிற்பகல் 3.30 மணிக்கும் பயணிகளுக்கான சேவை தினமும் ஆரம்பமாகும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

இச்சேவை 769/1 என்ற மார்க்க இலக்கத்தில் தனியார் பஸ் சேவை இடம்பெற்றுவருவதாக சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.(11)

## செயற்குழுக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயளலாளர் க.விஜயவாசன் அறிவித்துள்ளார். (11)

# புதிய தேவாலயம்



முப்பது வருடம் பழமை வாய்ந்த குருநகர் புதிய கடற்கரை வீதியில் அமைந்துள்ள அன்னை வேளாங்கன்னி மாதாவிற்குப் புதிய ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முற்பகல் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தை வண. நேசராசா அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பூசை வழிபாடுகளின் பின்னர் ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். தொடர்ந்து ஈ.பி.டி.பி.யின் யாழ். நகர் பொறுப்பாளர் றீகன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடிக்கல்லை நாட்டிவைத்தனர். (பா)



இந்திய நடனத்தாரகை கலைமாமணி ரமா வைத்தியநாதனதும் அவரது புதல்வி குமாரி தக்ஷணா வைத்தியநாதனதும் நாட்டிய நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிமுதல் 8.30 மணி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. கோப்பாய் ஆசிரிய கலைசாலை முத்தமிழ் மன்றத்தினதும் எக்ஸ்பிரஸ் நியுஸ் பேப்பர் நிறுவனத்தினதும் ஆதரவில் இடம்பெற்ற நிகழ்வுவில் கலந்துகொண்ட இரசிகர்களை காணலாம்.

சொர்க்கத்தை தேடிப்போக வேண்டியதில்லை, கட்டுப்பாட் டுடன் வாழ்க்கை நல்லொழுக்கமும், பிறரிடம் காட்டும் அன்பு, உதவி இவற்றால கிடைக்கும் மனநிறைவே சொர்க்கம். - பாபா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## கோழி கூவி விடிவதில்லை பொழுது!

இன்னொரு மொழியை எதிர்த்துப் போராட்டம் நடத்திய வரலாறு தமிழ்நாட்டு மக்களுக்குண்டு. ஹிந்தியை எதிர்த்து ரயில் மறியல், தார் பூசி அழித்தல், பெருந்திரளானோர் கைதாகி சிறை நிரப்புதல் என்று உக்கிரமாகப் போராடியிருக்கிறார்கள். திராவிட நாடு கோரியும் போராடினார்கள். பிறகு தமிழ்நாடு தனியாகப் பிரிய வேண்டும் என்றும் போராடினார்கள். இன்றும் ஒரு பகுதியினர் அதற்குப் போராடுகிறார்கள்.

ஊன்றிப் பார்த்தால், மொழி – இனரீதியான ஆவேசமும் கொந்தளிப்பும் நம்மைவிட அங்கு அதிகமாகவே இருக்கிறது. அயல்நாட்டிலுள்ள தமிழர்களுக்காகக் கூட தீக்குளிக்கத் தயாராகும் தமிழாவேசம் அங்குதான் அதிகம். (தமிழ்நாடே அழிந்தாலும் நாம் அவர்களைப் பொருட்படுத்துவோம் என்று சொல்லமுடியாது).

ஆனாலும் மொழிக்காகவோ தமிழ்த் தேசத்துக்காகவோ அந்த மக்கள் அழியும் வண்ணம் அங்குள்ள தலைவர்கள் நடந்து கொள்ளவில்லை. ஈ.வெ.ரா. பெரியார் ஆகட்டும், அண்ணாத்துரை ஆகட்டும், ம.பொ.சி. ஆகட்டும், ஆதித்தனார் ஆகட்டும், சம்பத் ஆகட்டும், கருணாநிதி ஆகட்டும் யாரும் மக்களை அழிவுக்குத் தள்ளும் அரசியலை நடத்தவில்லை. சமரசம் கண்டு உரிமைகளை வென்று கொள்ளும் விவேகமே காண்பித்திருக்கிறார்கள்.

நமது மக்களின் தலைவர்களாக இங்கு சொல்லிக் கொள்பவர்கள் என்ன செய்தார்கள்? அழிவைத் தவிர்க்கும் உபாயங்களை இவர்கள் ஒருபோதும் கணக்கிலெடுப்பதில்லை. மக்களின் கஷ்டங்கள் அவலங்களுக்கு மேலாக தங்கள் ரோசம் இனப்பெருமை குலப்பெருமை இவற்றால் கிடைக்கும் லாபங்களையே முன்னிறுத்தி அரசியல் செய்திருக்கிறார்கள்; செய்துகொண்டிருக்கிறார்கள்.

வாழ்விழந்து வதைபடும் அந்த மக்களுக்கே உணர்ச்சிகர ஆவேசங்களையூட்டி, அந்த போதையில் பொங்கவைத்துத் தொடரும் இந்த முடிவுகாணாப் பயணத்தை நடத்துவதில் இவர்கள் குற்றவுணர்ச்சி அடையாமலே இருப்பது எங்ஙனம்! வன்னிமக்களின் அவலமாக வரும் செய்திகள் நெஞ்சை உருக்குவன. குடாநாட்டிலும் பெரும்பான்மையோர் இன்னும் வாழ்வுதவி தேவைப்படும் நிலையில். போர் தின்ற குடும்பங்களின் நிலைமை காணும் எவரையும் உறுத்தலுக்குள்ளாக்கும்.

இவற்றை லட்சியம் செய்யாத ஒரு அரசியல் பிழைப்பை இன்னமும் நடத்துவது எங்ஙனம்! நல்ல அரசியலை விடுங்கள். நல்ல மனிதர் என்போர் யார்? பக்கத்திருப்பவர் துன்பம் தன்னைப் பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி என்பது பாரதியின் விளக்கம்.

அன்னப் பறவையிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது உண்டு. அதன் அழகான நடை இருக்கட்டும். தேவையற்ற பலவற்றுக்குள்ளிருந்து நமக்குத் தேவையான நல்லவற்றைப் பிரித்தெடுத்துக் கொள்ளும் அந்த இயல்பைத்தான் நமதாக்கிக் கொள்ள வேண்டும். சவால் பேச்சுக்களில் நம் நடப்பைக் காட்டுவதற்குப் பதிலாக மக்கள் கஷ்டங்களை உணர்ந்தால், சாத்தியம் எது வென்று அறிந்து அதிலிருந்து முன்னகரும் வழி நமக்குத் தெரிந்துவிடும்.

ஆள்பவர்க்குரிய கடமையை வலியுறுத்தும்போது, “யாண்டும் தீயன சிந்தியாமை” என்பதைக் குறிப்பிடுகிறான் கம்பன். “சிறியன சிந்தியாதான்” என்று வாலியைப் பாராட்டுகிறான். நல்லதை நினைப்பதற்கு, நம்முள்ளிருக்கும் வீம்பு, பெருமை, ரோசம், தன் முனைப்பு ஆகியவற்றைத் தாண்ட வேண்டும். நமக்கு வெளியே நினைக்கும்போதுதான் பல்லாயிரக்கணக்கானோரின் கஷ்டங்களை எண்ண முடியும். பெருந்தொகை மக்களின் வேதனைகளை நினைவில் தேட முடியும்.

அந்த வேதனைகளை மாற்றுவதே நம் அரசியல் நோக்கம் என்று கண்டால், அதன்பிறகு வெறுமனே தடித்த வார்த்தைகளை வீசிக் கொண்டிருப்பதிலுள்ள அபத்தம் விளங்கிவிடும். வாழ்வைச் செப்பனிடும் வழிமுறையை விரைந்து காணும் விவேகம் வந்துவிடும்.

அரசாங்கம் எதையும் தரத் தயாராக இல்லை, இந்தியா அரசை மிரட்டுவதாயுமில்லை, அமெரிக்கா ஐநாவும் போர்க்குற்றத்திற்கு அரசைச் சிறையில் தள்ளக் காணோம், உலகம் நம் பிரச்சினையில் எதையாவது செய்யத்தானே வேணும்... என்று சொல்லிக்கொண்டிருக்க எதற்குத் தலைவர்கள்?

இன்னும் இவர்களை நம்பிக் கொண்டிருந்தால், கோழி கூவினால் பொழுது விடியும் என்று புரிந்துகொண்ட கிழவியின் கதையைப் போலத்தான் ஆகும் நம் கதை!

– ஆசிரியர்

# வடமாகாண அரச அலுவலகங்களில் 37 கணக்காளர் வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபைக்குட்படுத்தப்பட்ட அரச அலுவலகங்களில் கணக்காளர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகளின் எண்ணிக்கை 62 ஆகும். இவ் எண்ணிக்கையில் இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த கணக்காளர்கள் 25 பேர் மட்டுமே தற்போது கடமையாற்றுகின்றனர்.

எனவே, மேலும் கணக்காளர் பதவிக்கான வெற்றிடங்கள் 37 உள்ளன. வடக்கு கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து முழு வெற்றிடங்களிற்கும் கணக்காளர்களை நியமனம் செய்ய முடியாத நிலைமை இருந்து வந்துள்ளது. கணக்காளர்களின் பற்றாக்குறை காரணமாக ஓய்வு பெற்ற கணக்காளர்கள் 5 பேர் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வடமாகாண திறைசேரி பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) அ. மனோரஞ்சன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கணக்காளர்களின் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களுக்குப் புதிய கணக்காளர்களை நியமிக்குமாறு 2010ஆம் ஆண்டில் NP/HG/NAR/07/30(20)ஆம் இலக்கமும், 30.07.2010 ஆம் திகதி கடிதம் மூலம் இலங்கை கணக்காளர் சேவை சபைக்கு கௌரவ ஆளுநரால் கடிதம் அனுப்பப்பட்டது.

மேலும் இலங்கை நிர்வாக சேவைக்கு என முறையான போட்டிப் பரீட்சைகளும், வடக்கு கிழக்கு மாகாணங்களிற்கென விசேட பரீட்சைகளும் நடாத்தி ஆளணிப் பற்றாக் குறையினை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றபோதும், இலங்கை கணக்காளர் சேவைக்கென ஆட்சேர்ப்புப் பரீட்சை நடாத்த பல முறை நிதி அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் 2008 ஆம் ஆண்டின் பின்னர் எவ்விதமான ஆட்சேர்ப்புப் பரீட்சைகளும் நடைபெறவில்லை.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கென விசேட பரீட்சை நடாத்த வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் அதுவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இருப்பினும் கடந்த நான்காண்டுகளாக புதிய கணக்காளர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் எவையும் பொது நிர்வாக அமைச்சினால் நடத்தப்படவில்லை.

மேலும், ஏற்கனவே சேவையிலுள்ள கணக்காளர் அனைவரிற்கும் பதில் நியமனம் வழங்கினாலுங் கூட கணக்காளர் பற்றாக்குறையே நிலவும். இருந்தும் நிரந்தரக் கணக்காளர்கள் சிலரிற்கு பதவி நியமனம் வழங்கப்பட்ட காலத்தில் அவர்களால் இரு அலுவலகங்களின் கடமைகளையும் வினைத்திறனாக மேற்கொள்ளமுடியாத நிலையில் மாகாண சபையின் நிதி முகாமைத்துவம் சிறப்பாக இடம் பெறமுடியாத நிலைகாணப்பட்டது. அத்துடன் வன்னி போன்ற தூர இடங்களிற்கு இவர்களை பதில் நியமனம் செய்ய முடியாத நிலைமையும் காணப்பட்டது.

இந் நிலையில் மாற்றீடாக கணக்காளர் சேவையின் அவசியத்தைக் கருத்திற் கொண்டு கணக்காளர் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்ற தகைமையைக் கொண்ட நிதிக் கிளைகளில் நீண்ட காலம் கடமையாற்றி நிதி தொடர்பான அறிவினையும், அனுபவத்தையும் பெற்றிருந்த அலுவலர்கள் தற்காலிகமாக கணக்காளர்களின் கடமைகளை மேற்கொள்வதற்காக நேர்முகத் தேர்வு ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். நிரந்தரக் கணக்காளர்கள் நியமிக்கப்படும் போது இப் பதிற்கணக்காளர் நியமனங்கள் இரத்துச்செய்யப்படும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே இப்பதிற்கணக்காளர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை சேவையைச் சேர்ந்தவர்களின் ஆளணிப்பற்றாக்குறை காரணமாக தேவைகளுக்கேற்ப பதிற்கடமை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு சேவைக்கும் இவ்வாறான நியமனங்களும் காலத்திற்கு காலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இது போன்றே இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு பல வெற்றிடங்கள் நீண்ட காலமாக இருந்தபோதிலும் முழுமையான நியமனங்கள் வழங்கப்படாமையால் பதிற்கடமை மேற்கொள்வதற்காக ஆசிரிய, அதிபர் சேவைகளில் இருந்து பலர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு கடமைபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கை நிர்வாக சேவையிலுள்ள வெற்றிடங்களிற்கு ஏனைய சேவைகளிலிருந்தும் திணைக்களத் தலைவர்களாக பதில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்நியமனம் ஒரு தற்காலிக ஏற்பாடாகுமென அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலவச மின்சார நடைமுறை குறித்து வடபகுதியில் மின்வலு அமைச்சர் சந்திப்பு

(கொழும்பு)

மகிந்த சிந்தனையின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தினூடாக வடபகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் இலவச மின்சாரத் திட்ட நடைமுறை தொடர்பான விசேட கூட்டம் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் மின்வலு எரிபொருள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி காலை 10 மணிக்கு மன்னார் பிரதேச செயலகத்திலும், மாலை 3 மணிக்கு வவுனியா பிரதேச செயலகத்திலும், 6ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு பிரதேச செயலகத்திலும், மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி பிரதேச செயலகத்திலும் மேற்படிக் கூட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாணசபைக்கு தனியான கீதம் அமைக்க முடிவு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்திற்கென தனியான மாகாண சபைக் கீதமொன்றை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் தனித்துவமான அம்சங்களை பிரதிபலிக்கும் வகையில், மாகாண சபைக் கீதத்தை உருவாக்குவதற்கு கிழக்கு மாகாண சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண சபையில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய ஆர்வமுடையவர்களிடம் இருந்து அதற்கான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுவதாக மாகாண பேரவை செயலகத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

கீதம் இயற்றுவதில் ஆர்வமுடைய கலைஞர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கிழக்கு மாகாண பேரவை செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கோரப்பட்டுள்ளது

## இசட் புள்ளி வழக்கு விசாரணை பெப்ரவரி 13 இற்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சார்த்திகளின் இசட் புள்ளிகளை கணிப்பதற்கு தவறான முறைமை பயன்படுத்தப்பட்டதாகக் கூறி அதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட உரிமைகள் மனு மீதான விசாரணையை உயர்நீதிமன்றம் பெப்ரவரி 13 ஆம் திகதிக்கு நேற்று ஒத்திவைத்தது.

இந்த மனுவை இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து க.பொ.த. உயர்தர மாணவர்கள் 16பேர் தாக்கல் செய்திருந்தனர். மனுதாரர் சார்பில் ஜே.சி. வெலியமுனவும் சட்டமா அதிபர் சார்பில் சிரேஷ்ட அரச வழக்குரைஞர் நெரின் புள்ளேயும் ஆஜராகியிருந்தனர்.

## மத்தியகல்லூரி சூழலை துப்புரவாக்கும் செயற்பாடு

(குருநகர்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யாழ். வருகையை முன்னிட்டு மத்தியகல்லூரிப் பிரதேசம் புதுமெருகு பெற்று வருகிறது.


மத்திய கல்லூரியைச் சுற்றி அமைந்துள்ள வீதிகள் ஏலவே ‘காப்பெட்’ போடப்பட்டுள்ளது. கல்லூரி மைதானத்தைச் சுற்றி அமைந்திருந்த மதில் சுவர்கள் அவசர அவசரமாகக் கட்டப்படுகின்றன.

கல்லூரியின் அனைத்துக் கட்டடங்களும் இளம் நீலநிறக் கோலமாக மை பூசப்பட்டு வருகின்றது. அதே வேளை கல்லூரிக்கு சமீபமாக அமைந்திருந்த பழைய கட்டடங்கள் அகற்றப்படுகின்றன.

இதனால் முதலாம் குறுக்கு வீதி மற்றும் நீதிமன்ற வீதிகளில் நின்று நீச்சல் தடாகத்தைப் பார்க்கக் கூடியதாக அமைவதும் குறிப்பிடத்தக்கது. (68)

# பெண்களின் தலைமைத்துவத்திற்கு புனித தெரேசாவும் உதவி புரிந்துள்ளது

## ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் பெருமிதம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்களும் உயர் நிலையில் உள்ளனர். சிறந்த தலைமைத்துவப் பண்பும் பொறுப்புணர்வும் அவர்களிடமுண்டு என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி புனித தெரேசா பெண்கள் கல்லூரியின் வருடாந்த விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வரும் ஒரேயொரு பெண்கள் கல்லூரி என்ற பெருமை இந்த புனித தெரேசா பெண்கள் கல்லூரிக்கு உண்டு. அந்த வகையில் அதன் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் நாம் முழுமையான பங்களிப்பைச் செலுத்தி வருகின்றோம். அத்தோடு எமது சமூகத்தில் பெண்களும் உயர்வாகவே மதிக்கப்படுகின்றார்கள். எனவே அவ்வாறான மதிப்பையும் இந்தக் கல்லூரி பெறுகின்றது.

கல்வியால் மேம்பட்ட பல பெண்கள் இம்மாவட்டத்தில் உயர்ந்த நிலைகளில் உள்ளனர். மாவட்டத்தின் மிக முக்கியமான பொறுப்புக்களையும் அவர்கள் வகிக்கின்றனர். எனவே இக்கல்லூரி எதிர்காலத்தில் மேலும் பல புத்திஜீவிகளை உருவாக்குவதற்கான அடித்தளமாக அமைய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர், போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி கௌரவித்துடன், இப்பாடசாலைக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பான்ட் வாத்தியக் கருவிகளை இவ்வருடம் வழங்குவதாகவும், பாடசாலை மைதானத்தினை புனரமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

இதில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கோட்டக்கல்வி அதிகாரி அமிர்தலிங்கம் மற்றும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களும், அயற்பாடசாலைகளின் அதிபர்களும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேல், அருட்தந்தை மயூரன மற்றும் அயற்பாடசாலைகளின் ஆசிரியர்கள், விளையாட்டுத் துறை அதிகாரிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் ஏற்பாட்டில், யுத்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் சுமார் 30 குடும்பங்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் வறிய நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த தலா இரண்டு மாணவர்களுக்கு அவரகளுடைய கல்விச் செயற்பாடுகளுக்கு உதவும்முகமாக மாதாந்தம் இரண்டு சைக்கிள்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அபிவிருத்திப் பேரவையின் தலைவரும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளருமாகிய தி.அ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 30 பயிற்சியாளர்களை உள்ளடக்கிய இரண்டு அணிகளுக்கான தையற் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், 20 பேர் கொண்ட ஒரு அணிக்கான அலங்காரப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து 35 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர் மக்களின் நிதிப் பங்களிப்புடன் இந்த உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் வங்கியின் பரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 2012 ஆம் ஆண்டுக்கான ஜெயஸ்ரீ பரிசுத்திட்டம் மக்கள் வங்கிக் கிளைகளில் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பரிசில் திட்டம் 2012 பெப்ரவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை நடைமுறையில் இருக்கும். இப்பரிசில் திட்டத்தின் மூலம் சேமிப்பு, நடைமுறைக் கணக்கில் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வைப்பிலிட்டவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

முதலாவது பரிசாக பைக்ரோ பன்டா மோட்டார் கார் அல்லது ரபே ரக்டர் (நாடளாவிய ரீதியில் 1), 2ஆவது பரிசாக 2[illegible] டெஹ் தொலைக்காட்சிப் பெட்டி (பிராந்தியத்துக்கு 2), 3ஆம் பரிசாக கிரைன்டேஸ் (அரைக்கும் இயந்திரம் - ஒவ்வொரு கிளைக்கும் 3 வீதம்) வழங்கப்படவுள்ளன.

அத்துடன் வருட இறுதியில் 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் மீதியை வைத்திருப்பவர்களுக்கு கொண்டா சிவிற்க் மோட்டார் கார் பரிசாகக் கிடைக்கும் என மக்கள் வங்கியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மகாகும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

புலோலி தெற்கு, மந்திகை கண்ணகை அம்மன் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.14 முதல் 8.23 வரையான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 7 மணிமுதல் அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும்.

இக்கும்பாபிஷேக நிகழ்வின் பிரதம குருவாக நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலய முதல்வர் சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (109)

# அரச நாட்டிய நாடகப் போட்டியில் நர்த்தன ஷேத்திராவிற்கு 20 விருதுகள்

(யாழ்ப்பாணம்)

2011 ஆம் ஆண்டுக்கான அரச நாட்டிய நாடகப் போட்டியில் யாழ். நர்த்தன ஷேத்திரா நடனாலயத்தின் 2 நாடகங்கள் சிறந்த நாடகத்திற்கான விருதுகளுடன் மொத்தம் 20 விருதுகளைப் பெற்றுள்ளது.

இலங்கை கலைக் கழக கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் சிறந்த நாட்டிய நாடகத் தெரிவுக்கான போட்டிகள் நடைபெற்றன.



இந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி பத்தரமுல்ல ஜனகலா மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் நர்த்தன ஷேத்திரா நடனப் பள்ளியின் சங்க இலக்கியப் புறநானூறு கூறும் இரும் பொறை மன்னனின் புகழ்கூறும் கதையைச் சித்திரிக்கும் "இரும் பொறை" நாடகம் மற்றும் இராமாயணத்தைச் சித்திரிக்கும் "கம்பன் காதை" நாட்டிய நாடகம் என்பன முதலாம் இடத்தைப் பெற்று சிறந்த நாடகத்துக்கான விருதைப் பெற்றன. அத்துடன், சிறந்த நாட்டிய நாடக நடிகர், நடிகை, துணை நடிகர், துணை நடிகை, நாடக முகாமை, நாடக ஒப்பனை, முகபாவம், இசையமைப்பு, ஒளியமைப்பு, ஆடையலங்காரம் என்பனவற்றுக்கும் மொத்தம் 20 விருதுகள் நர்த்தஷேத் திரா நடனப் பள்ளி கலைஞர்களுக்குக் கிடைத்துள்ளன.

இதன்போது, நாட்டியவேள் கலைஞர் வேல் ஆனந்தன் மற்றும் கலாபூஷணம் லீலாம்பிகை செல்வராஜா ஆகிய இருவருக்கும் "நாட்டிய வாருதி" விருதுகள் வழங்கப்பட்டன. 12 ஆவது தடைவையாக நடைபெறும் இந்த அரச நாட்டிய நாடக போடடியில் முதல் தடைவையாக தமிழ்க் கலைஞர்கள் பங்குபற் றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சிகரம் ஊடக செய்திப் பிரிவு)

# சட்டவிரோத செயல்களை தடுப்பதன் மூலம் துஷ்பிரயோகங்களை இல்லாதொழிக்கலாம்

## நெல்லியடி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்

சட்டவிரோதமாக இடம்பெறும் செயற்பாடுகள் மூலமே துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாகவும் இவற்றை இல்லாதொழித்தால் துஷ்பிரயோகங்கள் இடம்பெற வாய்ப்பிருக்காது என நெல்லியடி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் தெரிவித் துள்ளார்.

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலகத்தில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் ஏற்பாட்டில் நடைபெற்ற துஷ்பிரயோகங்களுக்கு எதிரான விழிப்புக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், துஷ்பிரயோகம் ஏற்படக் காரணம் சட்டவிரோதமான செயல்களே. குறிப்பாக துன்னாலை இராஜகிராமம் போன்ற கிராமங்களிலேயே அதிகம் காணப்படுகிறது. இதனைத் தடுப்பதற்கு அக்கிராம மக்களே பங்களிக்க வேண்டும். மாறாக பலர் இதற்கு உடந்தையாகவே செயற்படுகின்றனர்.

ஒன்றுகூடிக் கதைக்கும் இடங்களில் சட்டவிரோத செயற்பாடுகள் உருவாகின்றன. இப்படியான சந்தர்ப்பங்களில் நாம் எச்சரிக்கை செய்து வருகின்றோம். இம்முறைகள் குறித்து பெற்றோர்களும், ஆசிரியர்களும் தமது பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும்.

மது வியாபார நிலையங்களை நடத்துவோர் மதுப் போத்தல்களை அதிகமாக வாங்குபவர்களாயின் அவை என்ன தேவைக்கென கூறி அனுமதி பெற்று வாங்கவேண்டும். சிலர் வீதிகளில் குடித்துவிட்டு பாடசாலை வளவினுள் போத்தலை எறிந்துவிட்டுச் செல்கின்றனர். ஆகவே பொதுமக்கள் உதவினால் நாம் நல்ல சேவையைச் செய்ய முடியும். இது சம்பந்தமான தகவல்களை தொலைபேசி வாயிலாகவும் கூற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (116)



சிரேஷ்ட அமைச்சர் அத்தாவுட செனவிரட்ன அரசியலில் 60 வருடகாலப் பூர்த்தியை முன்னிட்டு தெஹியோவிற்ற பௌத்த ஆலயத்தில் நடைபெற்ற மத வழிபாட்டில் இணுவில் கந்தசுவாமி கோயில் பிரதம குருக்கள் இரா.ஸ்ரீஸ்கந்தராஜா அமைச்சருக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துவதைக் காணலாம்.

# பின்தங்கிய பிரதேச வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் நிலவுகின்ற போக்குவரத்துப் பிரச்சினையால் பாடசாலை மாணவர்களும் அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் மிகப் பின்தங்கிய கிராமங்களில் குறிப்பாக முழங்காவில், வட்டக்கச்சி, அக்கராயன், சாந்தபுரம் ஆகிய கிராமங்களில் போக்குவரத்து வசதிகள் இன்றுவரை சீர்செய்யப்படாத நிலை காணப்படுவதாகவும், இதனால் சாதாரணமாக ஒரு மணித்தியாலம் பயணம் செய்ய வேண்டிய தூரத்தை 2 அல்லது 3 மணித்தியாலங்கள் செலவிட வேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதைவிட இப்பிரதேசங்களிலுள்ள வீதிகளும் நீண்டகாலமாகப் புனரமைப்புகளின்றி குன்றும் குழியுமாக மிகக் கேவலமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியூடான போக்குவரத்து பெரும் சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாகவும் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் சைக்கிள் காற்றுப்போய் நடந்து செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் பல்வேறு வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் நிலையில் இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள வீதிகளைத் தற்காலிகமாவது புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)



காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் முதல் முறையாக இந்த வருடம் மாணவர்களின் பான்ட் வாத்திய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவுடன் கல்லூரி அதிபர் வே. முருகமூர்த்தி மற்றும் ஆசிரியர்கள் நிற்பதை காணலாம். (50)

# விளையாட்டுகளில் பங்கு பற்றும் வாய்ப்பை சகல மாணவர்களுக்கும் வழங்க வேண்டும்

## கரவெட்டி கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி. நற்குணலிங்கம்

(வடமராட்சி)

மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இணைப் பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான இல்ல மெய்வன்மைப் போட்டியின் மூலம் பொறுமை, சகிப்புத்தன்மை, தோல்வியைக் கண்டு கலங்காமை, மன உறுதி போன்ற சிறந்த மனப்பாங்குகளை அவர்கள் வளர்த்துக கொள்ள முடியும் என கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. நற்குணலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபர் சி.கண்ணதாசன் தலைமையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஆரம்ப பாடசாலை மாணவர்கள் குறைந்த வயதைக் கொண்டவர்களாக இருப்பதால், ஆரம்பத்தில் இருந்தே சிறந்த மனப்பாங்குகள் வளர விளையாட்டுப் போட்டி ஏதுவாக அமையும். சகல மாணவர்களும் ஏதோ ஒரு விளையாட்டில் பங்குபற்றக் கூடிய வாய்ப்பினை ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொடுப்பதன்மூலம் விளையாட்டில் பெறப்படும் பயன்கள் எல்லாமாணவர்களுக்கும் கிடைக்கக் கூடியதாக அமையும்.

ஒரு ஆரோக்கியமான சமூகம் உருவாக மாணவர்கள் கல்வியிலும் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் ஒன்று பட்டு செயற்படுவதன் மூலம் அவர்களை சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாக்க முடியும்.

இது ஒரு கிராமப் புற பாடசாலையாகும். குறைந்த மாணவர்களைக்கொண்ட பாடசாலையாகவுள்ள போதிலும், நகர்ப் புறப் பாடசாலை போன்று இல்ல மெய்வன்மைப்போட்டி நிகழ்வு மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. இதற்கு அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களது பங்களிப்பு போற்றத்தக்கதாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வடமராட்சி ஆரம்பக் கல்வி ஆசிரிய. ஆலோசகர் ஆர்.யசோதரன் மற்றும் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (116)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடை ஊசி (ARV) ஏற்றும் செயற்பாடு முனெடுக்கப்பட்டு வருவதாக விலங்கு விசர்நோய் தடுப்பு வைத்திய அதிகாரி வர்ணநாதன் தெரிவித்துள்ளார்.

இதன்படி கடந்த 30 ஆம் திகதி முதல் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொது சுகாதார பரிசோ தகர் ஊடாக சகல வளர்ப்பு நாய்களுக்கும் இத்தடுப்பு ஊசி ஏற்றப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இத் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு மேற கொள்ளப்படவுள்ளது.

தொடர்ந்து ஏனைய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. அச்சுறுத்தலாக இருக்கும் விலங்கு விசர் நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் வகையில் பொது மக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்குத் தவறாது இத்தடுப் பூசியை ஏற்றுமாறு வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (பா)

# வலிகாமம் கல்வி வலயத்தினால் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ். இளவாலை மெய்கண்டான் மகா வித்தி வகை 1C பாடசாலை, யாழ்.குட்டியப்புலம் அ.த.க பாடசாலை வகை II ஆகிய பாடசாலைகளுக்கு அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

வகை 1C பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-I (பட்டதாரி) ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும், இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1,2-I( பட்டதாரி),2-II (பயிற்றப்பட்டபட்டதாரி) ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் வகை II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2-I, 2-II (பட்டதாரி) ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2-I, 2-II (பட்டதாரி) ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம் என்றும் விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்தை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

# சமுதாய சீர்திருத்த பிரிவை ஆரம்பிக்க ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றத்தில் சமுதாய சீர்திருத்தப் பிரிவை ஆரம்பிப்பதற்குரிய முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் அமைச்சின் செயலாளர் திஸநாயக்க உறுதியளித்துள்ளனர்.

யாழில் நிறுவப்படவுள்ள புதிய சிறைச்சாலைக்கான அடிக்கல் நாட்டு வைபவத்தில் கலந்து கொண்ட அமைச்சர் மற்றும் அமைச சின் செயலாளரை யாழ். மாவட்ட நீதிபதி மா. கணேசராசா சந்தித்து சமுதாய சீர்திருத்தப்பிரிவு தொடர்பாக கலந்துரையாடிய போதே அவர்கள் இந்த உறுதிமொழியை வழங்கினர்.

புதிய சிறைச்சாலை யாழ். மாவட்டத்தில் நிறுவப்படவேண்டிய அவசியம் குறித்தும் மேலும் யாழ். நீதவானாக தமது சேவைக் காலத்தில் புதிய சிறைச்சாலை அடிக்கல் நாட்டப்பட்டிருப்பதுடன் மேலும் இந்தச் சிறைச் சாலைக் கட்டடத்தை தனது சேவைக் காலப்பகுதியில் கட்டி முடிக்க வேண்டும் என்ற விருப்பத்தையும் அமைச்சருக்கும் செயலாளருக்கும் யாழ். நீதிபதி தெரிவித்தார்.

சாவகச்சேரியில் சமுதாய சீர்திருத்தப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்ட பின் சிறைச்சாலையில் இட நெருக்கடி குறைந்திருப்பதையும், சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டியிருந்ததுடன் மேலும் யாழ். நீதிமன்றத்திலும் இந்த சிறைச்சாலை அடிக்கல் நாட்டப்பட்ட கையோடு, சமுதாய சீர்த்திருத்தப்பிரிவு உருவாவது சிறப்பாக இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (பா)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 12, 13 ஆம் வகுப்புக்களுக்கு இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது. வரணியில் அமைந்துள்ள ஆசிரிய வள மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் கற்றல் கையேடுகள் தயாரிக்கப் படவுள்ளதால் பங்குபற்றும் ஆசிரியர்கள் ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியை தவ றாது எடுத்துவருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

# ஆசிரியர் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரிய மாணவர்களுக்கான தை மாதத்திற்கான கொடுப்பனவுகளும், பயிற்சி தொடர்பான கலந்துரையாடலும் எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

# சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் பொலிஸாரின் கடமையை அலட்சியம் செய்த வாகன சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, நெல்லியடிப் பகுதியில் அதிவேகமாக வந்த கயஸ் வாகனத்தை அங்கு போக்குவரத்து கடமையில் நின்ற பொலிஸார் வழிமறித்தபோது அவ்வாகன சாரதி பொலிஸாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதனையடுத்து மல்லாகம் பகுதியைச் சேர்ந்த குறித்த சாரதியை பொலிஸார் விசாரணைக்காக அழைத்துச் சென்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை ஆஜர்படுத்தினர்.

குறித்த சாரதியை நீதவான் பிணையில் செல்ல அனுமதித்தார். எனினும் பொலிஸாரின் கடமையை அலட்சியம் செய்த குற்றத்திற்காக பொலிஸார் அவர் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (18)

# முரசின் இன்றைய பலன்

(03.02.2012 -வெள்ளிக்கிழமை)

கர வருஷம் தை மாதம் 20 ஆம் திகதி. ஏகாதசி பின்இரவு 3.59 வரை.
நட்சத்திரம் ரோகிணி. மரணயோகம் முற்பகல் 10.24வரை. பிற்பகல் ஏகாதசி விரதம்
இராகுகாலம் 11.05 - 12.35வரை. சுபநேரம். 6.35 - 8.05 வரை.
எமகண்டம் 3.35 - 5.05 வரை. குளிகைகாலம் 7.35 - 9.05 வரை. பீமஏகாதசிவிரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தெளிவு, பயணச் செலவு, நண்பர்கள் உதவி, குடும்பத்தில் திருப்தி. |
| ரிஷபம் | கலையார்வம், அதிர்ஷ்டம், விருந்தினர் வருகை, முன்னேற்றம். |
| மிதுனம் | சஞ்சலம், செலவுகள் அதிகரிப்பு, புத்திரப் பேறு, புதியதொழில் முயற்சி. |
| கடகம் | இலாப அதிகரிப்பு, அரச உதவிகள், தொழில் வளம், பயப்பிராந்தி. |
| சிம்மம் | திடீர் உதவி, நம்பி ஏமாறவேண்டாம், அந்நியரால் கஷ்டம், உற்சாக மிகுதி. |
| கன்னி | அதிகாரி உதவி, கொடுக்கல்வாங்கலில்கெடுபிடி, நண்பர்களால் தொல்லை, தர்ம சங்கடம். |
| துலாம் | பயணம் தவிர், கடின உழைப்பு, குடும்பத்தில் நிம்மதி, காரியானுகூலம். |
| விருச்சிகம் | கடன்தொல்லை, சமூகத்தில் மதிப்பு, காரியானுகூலம், இடமாற்றம். |
| தனுசு | கடன்தீருதல், குடும்ப சுகம், வழக்கில் வெற்றி, பெற்றோர் உதவி. |
| மகரம் | புத்திமேன்மை, உற்சாகம், குடும்ப அதிருப்தி, தொழிலில் போட்டி. |
| கும்பம் | அதிகாரம், இரட்டிப்பு செலவு, அகால போஜனம், இலட்சுமிகடாட்சம். |
| மீனம் | சந்தோஷம், உறவினர் வருகை, .வெளியூர் பயணம், பதவி உயர்வு. |



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் தரம் 6 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் மாணவர்கள், அதிபர் ஆசிரியர்களுடன் நிற்பதைக் காணலாம். (116)

# சுயநிர்ணயமும் தேசமும்

-தி. ஸ்ரீதரன்-





சுய நிர்ணயம் என்ற சொல்லாடல் சமத்துவமான வாழ்வுரிமையைப் பிரதி பலிப்பது.

பிரதானமாக காலனிகளின் சுதந்திரம், இனங்களின் சமத்துவத்தை வலியுறுத்துவது. அது இன்று கல்வி, பெண்ணுரிமை என பல தளங்களுக்கு வியாபித்துள்ளது.





நிலமானிய சமூகத்திலிருந்து முதலாளித்துவ சமூகம் உருவான காலத்திலும், ஏகாதிபத்திய உருவாக்கம் நிகழ்ந்த காலத திலும் -பிரதானமாக மார்க்ஸ், ஏங்கல்ஸ், ட்ரொட்ஸ்கி, றோசா லக்சம்பேர்க் போன்றவர்கள் சுயநிர்ணய உரிமை பற்றிய விவாதங்களில் செழுமை மிகு கருத்துகளை வழங்கியிருந்தார்கள். ஆழமான வாதப்பிரதிவாதங்களை நிகழ்த்தியிருந்தார்கள்.

இந்தக் கருத்துக்கள் மார்க்சியர்கள் அல்லாதவர்களாலும் ஆய்விற்கெடுக்கப்பட்டு உலகம் முழுவதும் வியாபித்தது.

சாராம்சம் என்னவென்றால் நாடுகளிடையே சமூகங்களிடையே தேசங்களிடையே சமத்துவமான வாழ்வு என்பதே.

ஆக்கரமிப்பில்லாத வகைப்பட்ட வாழ்வு என்பதே.

அந்தவிதமான வாழ்வு தமிழர்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும், மலையக மக்களுக்கும் நலிவுற்ற சிங்கள பிரதேசங்க்ளுக்கும் (அவர்கள் கோரிக்கை விடுத்தால்) கிட்ட வேண்டும் இலங்கை ஒரு பல இன தேசமாக கட்டியெழுப்பப் படவேண்டும் என்பதே இங்கு முக்கியமானது.

ஆனால் சமூகத்தில் ஒரு பகுதியினர் மீதும், பிரதேசங்களின் மீதும் ஆக்கிரமிப்பு மனோபாவத்தை வைத்துக் கொண்டு தமக்கு ஏக அதிகாரம் வழங்குமாறு கோருவது சுயநிர்ணய உரிமையின் தார்மீக வலுக்களுக்கு நேர் விரோதமானது.

சுயநிர்ணய உரிமை, தேசம் பற்றி பேசுபவர்கள் பலர் முஸ்லிம் மக்கள், மலையகத் தமிழர், வடக்கில் சமூக ஒடுக்குமுறைக்குள் வாழ்பவர்கள், பிரதேச ரீதியிலான அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் பற்றி மூச்சு விடுவதில்லை. அவ்வாறு பேசுவது தமிழர் ஒற்றுமைக்கு இழுக்கு என பாசாங்கு பண்ணுவர்கள்.

யாழ்மையவாத நிலமானிய சமூகத்தின் அதே கட்டமைப்பை கலாசாரம் பண்பாட்டின பேரில் பாதுகாக்க முனைகிறார்கள்.

சாதிமேலாதிக்கம், பெண் அடிமைத்தனம் அத்தனை அங்கலட்சணத்துடனும் அதனைப் பேணமுற்படுகின்றனர்.

பழம் பெருமை பெற்ற குடும்பங்களின் வாரிசுகளை அரசியல் தலைவர்களாக முடிசூட்டுவதற்கான திட்டங்களும் தீட்டப்படுகின்றன.

இயக்கங்களிலிருந்த தீண்டத்தகாத பிறவிகளிடமிருந்து தமிழ் அரசியல் மீட்கப்படவேண்டும் என்று களவாணித்தனமான முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். யாழ்மையவாத ஏகபிரதிநிதித்துவ கருத்தியலே சுயநிர்ணயம் தேசம் என்றும் தமது ஏக உரிமை என்று கருதுகிறார்கள் போலும்.

அது அனைத்து தரப்பு ஒடுக்கப்பட்ட இன சமூகங்களுக்கும் உரியது. பௌத்த சிங்கள பேரினவாதம் எவ்வாறு வெவ்வேறு சமூகங்களின் அடையாளங்களை கலாசாரத்தை பொருளாதார வாழ்வை நம்பிக்கைகளை தன்னுள் கரைத்துக் கொள்ள அல்லது அழித்து விட முயல்கிறதோ அதன் சாயல்கள் இங்கும் காணப்படுகிறது.

வடக்கிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியேற்றப்பட முஸ்லிம் மக்கள தொடர்பான மௌனம், துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான மாற்று இயக்கப்போராளிகள், சொந்த - சக சமூகங்களின் மக்கள், அரசியல் தலைவர்கள், கல்விமான்கள் தொடர்பான மௌனம், முள்ளிவாய்க்காலுக்கப்பால் இந்த 30 வருடங்களும் விரிகிற சகல தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றிய மௌனம் எல்லாம் வசதிக்கேற்ற மௌனங்கள்.

இந்த பிரிவினர் எல்லோருக்குமாக எல்லோரினதும் சார்பில் உங்களுக்கு சுய நிர்ணய உரிமை வேண்டும் என்பது தமிழ பாசிசத்தை மீள நிலை நிறுத்துல் ஆகும்.

இலங்கை பெருமை மிகு தேசம் மும்மணிகளின் ஆசிகள் பற்றியதெல்லாம் பௌத்த சிங்கள இனப் பெருமிதங்களே. பௌத்த மதத்தின் உயர் விழுமியங்கள் எதற்கும் இதில் துளியளவு மரியாதையும் கிடையாது. உண்மையில் பௌத்தமதம் இலங்கையில் அதன் உண்மையான அர்த்தத்தில் மீட்கப்பட வேண்டும்.

காவி உடைகளும் தாதுகோபங்களும் தமிழ்மக்களின் பிரதேசங்களில் காணப்படும் வீதி புத்தர்களும் இங்கு பௌத்தம் ஆகிவிடாது. அது மனங்களால் தரிசிக்கப்பட வேண்டும். அதன் உயரிய கோட்பாடுகள் கிரகிக்கப்பட வேண்டும்.

உயிர்க்கொலை, சித்திரவதைகள், பேராசை, ஆக்கிரமிப்பு, ஒடுக்குதல் இவற்றுக்கு பௌத்தம் நேரிடை எதிரி.

இந்த அர்த்தத்தில் எமது நாட்டில் பௌத்தம் அருகி விட்டது.

யதார்த்த சமூக பொருளாதார அபிவிருத்திகள் சமகால ஜனநாயக விழுமியங்களைப் புறக்கணித்து ஏற்படுத்த முடியாது. மகாவம்ச துட்டகைமுனு உதாரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவை சமூகத்திற்கு போதை மருந்து ஊசிகளாகி சமூக உறவுகளை சீர்குலைத்து நரகத்தின் வாயிலைத் திறக்குமே தவிர வேறொன்றும் நடக்காது.

சில வாரங்களுக்கு முன்னர் ஜேவிபியின் இரு அணிகளும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா போன்றவர்களும் அதிகாரப் பரவலாக்கல் இராணுவமயமாக்கல் பற்றிப் பேசினார்கள்.

ஆனால் 13ஆவது திருத்தம் அதற்கு மேல் அதிகாரப்பரவலாக்கல் பற்றிய வலியுறுத்தல்கள் தீவிரமடைந்த போது இப்போது அவர்கள் மறுக்கத்தொடங்கி விட்டார்கள்.

அவர்கள் வெளிப்படையாகவே அதிகாரப் பரவலாக்கலுக்கெதிராக பேசுகிறார்கள்.

அனைத்து மக்களையும் சமமாக நடத்துதல், மொழி உபயோகம் பற்றிய தமது பழங் கதைகளை அவிழ்த்து விடுகிறார்கள்.

பொலிஸ் கேட்டார்கள், நிலம் கேட்டார்கள் இப்போது நிதியும் கேட்கிறார்கள், ஏதோ கேட்கத் தகாததை கேட்டு விட்டார்கள் என்று பாசாங்காக வெகுண்டெழுகின்றன ஆங்கிலப் பத்திரிகைகள் சில.

1950களில் கொல்வின் இருமொழி ஒரு நாடு, ஒரு மொழி இருநாடு என்றார்.

ஆனால் 72 இல் அவர் தயாரித்த அரிசியல் யாப்பு அவருடைய 1956 கருத்துகளை நிராகரிப்பதாக இருந்தது.

ஆனால் 1956 இல் உரைத்தது அவருடைய தீர்க்கதரிசனத்தைப் புலப்படுத்துகிறது.

எவ்வளவுக்கு எவ்வளவு சிறுபான்மையினரின் உரிமைகள் அங்கீகரிக்கப்படுகின்றனவோ அந்த அளவிற்கு இந்த நாடு ஒருங்கிணைந்து செயற்படுவதற்கும் ஒருதேசமாக பரிணமிப்பதற்குமான சந்தர்ப்பம் அதிகரிக்கும்.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறையுள்ள சிறுபான்மைச் சக்திகள் அத்தனையையும் ஜனநாயக வழியில் இணைத்துக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியில் செல்லவேண்டும். இனப்பிரச்சினை தீர்வில் அக்கறையுள்ள இடைவெளியொன்றிருக்கிறது. அந்த இடைவெளியில் இறங்கத் தயாராக வேண்டும்

எதிர்க்கட்சிகள், அதிகாரப்பகிர்வை ஆதரிப்போர், இடதுசாரிகள், புத்திஜீவிகள் என அனைத்து தரப்பினரிடமும் செல்ல வேண்டும்.

நாங்கள் நாட்டைப் பிரிப்பதற்கில்லை. சமத்துவமான வாழ்வுரிமையையே கோரி நிற்கிறோம். யுத்தத்திற்கு பிந்திய காலத்தில் உண்மையான சமூகப்புரிந்துணர்வு ஏற்பட இணைந்து செயற்பட வருமாறு அழைப்பு விடுக்க வேண்டும்.

எதையும் தட்டிக்கழிப்பதை விட ஏதோ ஒன்றை ஆக்க பூர்வமாக சாதிப்பதை இலக்காக கொள்ளவேண்டும்.

"நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ" என்ற பாரதியாரின் வார்த்தைகள் இங்கு பொருத்தமானவை

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக 50:50, பண்டா செல்வா ஒப்பந்தத்திலிருந்து இலங்கை-இந்திய ஒப்பந்தம், சந்திரிகா ஆட்சியில் பரிந்துரைக்கப்பட்ட கூட்டாட்சி அரசியல் யாப்பு, பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவின் யோசனைகள் என பல விடயங்கள் இறைந்து கிடக்கின்றன.

இவற்றிலிருந்து சில நல்ல மணிகளை நாம் பொறுக்கி எடுக்கமுடியும்.

முனைந்தால் முடியாததொன்றுமில்லை. இதனைச் செய்வதற்கு அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச் சொல் எல்லாவற்றையும் தவிர்த்துவிட்டு சகல தரப்புக்களுமே பேச முன்வரவேண்டும். இன்றைய உலகில் பேச்சுவார்த்தை மேசை என்பதும் ஒரு மதிப்பு வாய்ந்த இடமாகும். ஊடகங்களும் அவ்வாறுதான்.

ஆனால் அவற்றில் பரஸ்பரம் எச்சம் இட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவை துப்புரவு செய்யப்படவேண்டும். நேர்த்தியாக தூரதிர்ஷ்டியுடன் அறிவொளியுடன் விடயங்கள் முன்வைக்கப் பட வேண்டும்.

இதுவே, சரியாகவோ பிழையாகவோ தேசிய இன உரிமைப் போராட்டத்தை உள்வாங்கிக் கொண்டு தமது உயிரை மாய்த்தவர்களுக்கும், ஜனநாயக விரோத அராஜகங்களில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும், கடந்த 30 வருட யுத்தத்தில் இடையில் அகப்பட்டு மரணித்த பல்லாயிரம் மக்களுக்கும் நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

## பேனாவால் குத்திய வடு!



பல திறமையான, பிரபல எழுத்தாளர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். ஜெயமோகனாகட்டும், ஞாநியாகட்டும், மார்க்ஸாகட்டும், சாரு நிவேதிதாவாகட்டும், ராமகிருஷ்ணனாகட்டும், மனுஷ்யபுத்திரனாகட்டும், முருகனாகட்டும், அரவிந்தனாகட்டும் அல்லது இங்கு குறிப்பிட மறந்த மற்ற எழுத்தாளர்களாகட்டும்.... ஒருவருக்கொருவர் சளைக்காமல் மிகச் சிறப்பான முறையில் எழுதுகிறார்கள். நிறையப் படித்து, ஏராளமான விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் கையாளும் subjectகள் எனக்கு மிக மிக ஆச்சரியமளிப்பவை. சமயத்தில் கொஞ்சம் பொறாமையாகக் கூட.... நமக்கு இதெல்லாம் தெரியவில்லையே என்று...

அதிருக்கட்டும். நான் சொல்ல வந்தது என்னவென்றால்... இவ்வளவு நல்ல, பலமுனை அறிவுள்ள எழுத்தாளர்கள், தாங்கள் கண்டு, படித்து, அறிந்து, தெளிந்தவற்றை எழுதி வாசகர்களுக்கு விருந்து படைக்காமல், வெட்டிச் சண்டையில் தங்களின் சக்தியை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்களே என்ற மன வருத்தம் எனக்கு உண்டு. ஒருவொருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் மல்லுக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். தேவையில்லாமல் பக்கம் பக்கமாக இணையவெளியில் ஒருவரை ஒருவர் ஏசிக்கொண்டிருக்கிறார்கள்.

அதிலும், இளம் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டிய சீனியர் எழுத்தாளர்களே கூட முண்டாவைத் தட்டிக் கொண்டு "கோதாவில்" இறங்கிவிடுகிறார்கள் என்பதுதான் இன்னும் வருத்தமளிக்கக் கூடிய செய்தி.


"நாவினாற் சுட்ட வடுவே" ஆறாதென்றால், "எழுத்தாணியால் குத்திய வடு" எப்படி ஆறும்? புரையோடிச் சீழ் அல்லவா பிடித்துப் போகும்?

இவர்கள் இப்போதுதான் இப்படியா? அல்லது எப்போதுமே இப்படியா? என்று எனக்குத் தெரியவில்லை. நல்லது. போனவை போகட்டும். இனிமேலாவது படைப்பாளிகள் நடந்தவற்றை மறந்து, நல்ல பல விஷயங்களை இணைய வாசகர்களுக்கு அளிக்க வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே,
"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்.
கலைச் செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"
கூடவே,
"குஸ்தி" போடாமலும் இருப்பீர்!

-பி.எஸ். நரேந்திரன்-


## கால்களின் நீளம்!



ஆபிரகாம்லிங்கனின் கால்கள் மிக மிக நீளமானவை. லிங்கனின் நண்பர் ஒருவர் அதைக் கேலி செய்யும் எண்ணத்தில் லிங்கனிடம் வந்து, "லிங்கன்! பொதுவாக மனிதனின் கால்கள் எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்?" என்று கேட்டார். தன்னைக் கேலி செய்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட லிங்கன், "சாதாரணமாக இடுப்பிலிருந்து தரையைத் தொடும் அளவுக்கு இருந்தால் போதும்" என்றார் நிதானமாக.

# கியூபாவின் உண்மைகள்

-எஸ்.பி.ராஜேந்திரன்-




புரட்சிகர பூமியாம் சோசலிச கியூபாவிற்கு எதிராக அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகள், வர்த்தகத் தடைகள் பற்றி நாம் அறிவோம். உலகெங்கிலும் உள்ள அமெரிக்க ஆதரவு முதலாளித்துவ ஊடகங்கள் கியூபாவிற்கு எதிராக நடைமுறைப்படுத்தி வரும் ஊடகத்தடை நாம் அதிகம் அறியாதது.

சமீப நாட்களாக கியூபாவுக்கு எதிராக உலக ஊடகங்களில் ஒரு திட்டமிட்ட அவதூறுச் செய்தி உலா வந்துகொண்டிருக்கிறது. அந்தச் செய்தி கியூபாவை ஒரு பிசாசைப்போல வர்ணிக்கிறது. கியூபாவில் மனிதஉரிமை காலில்போட்டு நசுக்கப் படுவதாகக் கதைக்கிறது. கியூபாவில் சிறைக் கைதி ஒருவர் இறந்துபோனது குறித்தே இத்தகைய செய்திகள் பரப்பப்பட்டுள்ளன.

கடந்த நான்காண்டுகாலமாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் இறந்துபோனது உண்மைதான். தனது மனைவியை பொது இடத்தில் மிகக்கொடூரமான முறையில் தாக்கிக் காயப்படுத்திய குற்றத்திற்காகவும், அவரை தடுத்து நிறுத்த முயன்ற காவல்துறையினர் மீது வன்முறைத் தாக்குதலை நடத்திய குற்றத்திற்காக வும் கைது செய்யப்பட்டு, சட்ட நடைமுறைகளின் அடிப்படையில் அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சிறையில், அவருக்கு ஏற்கெனவே இருந்த உடல்நலக் குறைபாடுகளின் தொடர்ச்சியாக மூச்சுக்குழலில் தொற்று ஏற்பட்டு அனைத்து உறுப்புகளும் செயலிழந்தன. சிகிச்சை பலனின்றி கியூபாவின் மிகப்பெரிய மருத்துவமனையான சாண்டியாகோ டி கியூபா மருத்துவமனையில் அக்கைதி காலமானார்.

இந்தச் செய்தியைத்தான், உண்மைகளை மறைத்துவிட்டு உலகெங்கிலும் எடுத்துச் செல்கின்றன முதலாளித்துவ ஊடகங்கள். ஒருபுறம் அமெரிக்கா, மறுபுறம் ஸ்பெயின், மற்றொருபுறம் சிலி என எதேச்சாதிகார - ஏகாதிபத்திய ஆதரவு ஆட்சியாளர்கள் இந்த செய்தியை கையில் வைத்துக் கொண்டு கியூபாவுக்கு எதிராக விஷத்தைக் கக்கி வருகிறார்கள்.

கியூபாவை திட்டித் தீர்க்கும் ஐரோப்பிய கூட்டாளிகளின் 'மிகவும் நாகரிகமான' அரசுகள், தங்களது நாடுகளில் தற்போது நடந்து கொண்டிருக்கும் மகத்தான தொழிலாளர் இயக்கங்களின் மீது, முன்னெப்போதையும் விட கொடூரமான தாக்குதலை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனவே, ஏன்?

ஸ்பெயின் நாட்டுச் சிறைகள் நிரம்பி வழிகின்றன. அத்தனை பேரும் அந் நாட்டிற்கு வேலை தேடி ஆபிரிக்க நாடுகளிலிருந்து வந்த அப்பாவிகள். கடந்தாண்டு ஜூலை மாதம் டெரூயல் எனும் நகரில் அமைந்துள்ள சிறைக் கொட்டடியில், ஒரு சாதாரண சிறைவாசி பல மாத காலம் பட்டினிப்போராட்டம் நடத்தி இறந்துபோனார். எப்படி? அவர் மொராக்கோ நாட்டிலிருந்து பிழைப்பு தேடி இங்கு வந்தவர். எந்தக் குற்றமும் செய்யாததற்காக கைது செய்யப்பட்டார். தான் ஒரு அப்பாவி என்பதை நிரூபிப்பதற்காகவே பட்டினி கிடந்து உயிர் நீத்தார். அவரது கதறலை ஸ்பானிய அதிகாரிகள் ஏறெடுத்துக்கூட பார்க்கவில்லை.

சிலி நாட்டில் சர்வாதிகாரி பினோசெட்டின் கையாட்கள்தான் ஆட்சியிலிருக்கிறார்கள். சமீபத்தில் பள்ளிப் பாடப் புத்தகங்களில் கொடுங்கோலன் பினோசெட் பற்றி புகழ்பாடும் பாடம் இடம் பெற்றதை எதிர்த்து போராட்டத்தில் இறங்கிய மாணவர்கள் மீது கொடிய அடக்குமுறை ஏவப்பட்டது. பலர் மீது பயங்கரவாத தடுப்புச்சட்டம் பாய்ந்தது.

அமெரிக்க ஆட்சியாளர்களோ மிகவும் 'நல்லவர்கள்'.

கியூபாவின் மனித உரிமையைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

உலகிலேயே மிகமிக மோசமான முறையில் மனித உரிமைகளைப் பராமரிக்கிற ஒரு நாடு இருக்கிறதென்றால், அது அமெரிக்காவே என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சிலே பளிச்சென்று சொல்லியிருக்கிறது. இந்த நாட்டின் பெண்கள் மிடுக்கான உடைகள் உடுத்தலாம் ஆனால் ஆணுக்கு நிகரான உரிமைகள் இல்லாதவர்கள். இன ரீதியான, மத ரீதியான ஒடுக்குமுறைகளுக்கு அமெரிக்க மாகாணங்களில் ஏராளம் ஏராளம் உதாரணங்கள் மறைந்திருக்கின்றன.

சிறைகள் சித்ரவதைக்கூடங்கள். இந்த நாட்டின் நீதித்துறை அடிக்கடி 'தவறான' தீர்ப்புகளையே வழங்கும். நீதித்துறையின் 'தவறுகளில்' சிக்கிய வர்களுக்கு மரண தண்டனை உறுதி. உலகிலேயே சின்னஞ்சிறுவர்களையும் மன ரீதியாக பாதிக்கப்பட்டவர்களையும் கூட தூக்கிலேற்றிய பெருமைக்குரியது அமெரிக்க அரசு.

2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தற்போது வரை 90 சிறை வாசிகளை தூக்கில்போட்டு கொன்றிருக்கிறது அமெரிக்க நிர்வாகம். இன்னும் 3 ஆயிரத்து 220 பேருக்கு மரணக்கயிறு காத்திருக்கிறது.

கடந்தாண்டு நவம்பர் மாதத்தில் கலிபோர்னி யாவில் உள்ள மிகப் பெரும் சிறை ஒன்றில் அனைத்துக் கைதிகளும் ஒட்டுமொத்தமாகப் பட்டினிப்போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் ஏவப்பட்டது. மூன்றுபேர் அடி வாங்கியே செத்துப்போனார்கள்.

உள்நாடு மட்டுமின்றி ஆப்கானிஸ்தான், ஈராக், பாகிஸ்தான், லிபியா உட்பட பல்வேறு நாடுகளில் அமெரிக்கா கொன்று குவித்த உயிர்கள் ஏராளம் ஏராளம்.

முதலாளித்துவ ஊடகங்கள் உரைக்க மறுக்கிற உண்மை இது.

## அழகிக்கு உதவும் படிப்பு!


ஒரு படத்தில் புஷ்டியாகவும் இன்னொரு படத்தில் ஒல்லியாகவும் சில படங்களில் கச்சிதமான உடலமைப்புடனும் தோன்றுவதில் இப்போதைய நடிகைகளில் ரிச்சா கங்கோபாத்யாயாதான் முன்னணியில் இருக்கிறார். இதற்குக் காரணம், உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் ஊட்டச்சத்து நெறிப்படுத்துகை சம்பந்தமான பட்டப் படிப்பில் பி.ஏ. பட்டம் பெற்றவர் ரிச்சா. புத்திசாலித்தனமாகப் பேசுபவரைப் பார்த்து, "அவர் படிச்சவரில்லையா!" என்று வியப்பது வழக்கம். அதே வியப்பு வார்த்தையை ரிச்சாவின் அழகுக்கும்தான் சொல்லலாம்.



வங்காளத்தில் பிறந்து அமெரிக்காவில் வளர்ந்த ரிச்சா, நடிக்க வருவதற்கு முன்பு மிஸ் இந்தியா, மிஸ் யுஎஸ்ஏ, மிஸ் பியூட்டி.ஃபுல் ஐஸ், மிஸ் ஃ. போட்டோஜெனிக், பெஸ்ட் மொடல், பெஸ்ட் கேட்வோக் கேர்ள், பெஸ்ட் ட்ரெஸ்ஸிங் சென்ஸ் லேடி உட்பட ஏராளமான போட்டிகளில் முதலிடம் வென்றவர். நடிப்புத்துறையைத் தேர்ந்தெடுத்தவுடன் பொலிவுட் நடிகர் அனுபம் கெர் மும்பையில் நடத்தி வரும் பிரபல நடிப்புப் பள்ளியில் சேர்ந்து முறையாக நடிப்புப் பயிற்சியைப் பெற்றுள்ளார்.

## மார்க் ட்வைனும் பாதிரியாரும்!

பிரபல அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர் மார்க் ட்வைன் ஒரு சமயம் பிரார்த்தனைக்காக தேவாலயத்துக்குச் சென்றிருந்தார். அங்கிருந்த பாதிரியார் மதத்தைப் பற்றியும், பிரார்த்தனையின் மகிமையைப்பற்றியும் நீண்ட



நேரம் பிரசங்கம் செய்துவிட்டு முடிவில், மார்க் ட்வைனைப் பார்த்து, "என்னுடைய பிரசங்கத்திலிருந்து என்ன காண்கிறாய்?" என்று கேட்டார்.

மார்க் ட்வைன் வழக்கம்போல "ஐயா! உங்கள் பேச்சு நன்றாக இருந்தது. ஆனாலும் நீங்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் என்னிடமுள்ள புத்தகத்தில் ஏற்கனவே இருக்கிறது" என்றார்.

பாதிரியார் ஆச்சரியப்பட்டு எப்படி நான் பேசிய எல்லா வார்த்தைகளும் ஏற்கெனவே அந்த புத்தகத்தில் இருக்க முடியும் என எண்ணி, "நான் அந்தப் புத்தகத்தை பார்க்க முடியுமா?" என்று கேட்டார்.

மார்க் ட்வைன் தன் பையைத் திறந்து அதிலிருந்த ஒக்ஸ்போர்ட் அகராதியை எடுத்து பாதிரியார் கையில் கொடுத்தார். பாதிரியாருக்கோ ஆச்சரியமும் சிரிப்பும்!

## பேர்ணாட் ஷோவின் கோட்!




ஒருநாள் ஜோர்ஜ் பேர்ணாட் ஷோ பழைய கிழிந்த கோட் ஒன்றை அணிந்துகொண்டு தியேட்டர் ஒன்றுக்குள் நுழைந்தார். அங்கே காவல் காப்பவன் அவர் முன் வந்து, "நீ இந்த மாதிரி கோட்டைப் போட்டுக்கொண்டு உள்ளே போக முடியாது" என்று தடுத்தி நிறுத்தினான்.

"நீ இந்த கோட்டை விரும்பவில்லையா? அப்படியானால் நான் இதை கழட்டிவிடுகிறேன்" என்று கூறிக்கொண்டே, கோட்டைக் கழட்டி அந்த காவல்காரனிடமே கொடுத்து விட்டு, அவனைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றார்.

அந்த காவலாளி அவர் பின்னாலேயே, "நில்! நில்! நீ இந்தமாதிரி போகக்கூடாது" என்று கத்திக்கொண்டே அவர் பின்னால் ஓடினான்.

பேர்ணாட் ஷோ திரும்பி அவனிடம் கோபமாக, "மீதி இருக்கிறதையும் நான் கழற்ற வேண்டுமென்று நினைக்கிறாயா?" என்று திருப்பிக் கேட்டார். காவலாளி குழப்பத்துடன் திரும்பிச் சென்றான். பேர்ணாட் ஷோ அமைதியாக தியேட்டருக்குள் சென்றார்.

# 13 ஆவது திருத்தத்தை தாண்டிய தீர்வு சாதாரண மக்களுக்கு பிரச்சினையல்ல

——— கூறுகிறார் அமைச்சர் டிலான் ———



(கொழும்பு)

புதுடில்லிக்குச் சென்றுள்ள பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ இந்திய பாதுகாப்புச் செயலாளர் சகிகாந்த் சர்மாவைச் சந்தித்துக் கலந்துரையாடிய வேளை நாட்டில் வாழும் சாதாரண மக்களுக்கு 13ஆம் திருத்தச் சட்டத்தை தாண்டிய தீர்வுத் திட்டம் ஓர் பிரச்சினையல்ல என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். வடக்கிலும் தெற்கிலும் வாழும் சாதாரண மக்களுக்கு 13 பிளஸ் பற்றிக் கவலையில்லை. வடக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த சில அரசியல்வாதிகளே 13 பிளஸினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் பிரதேச பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் கருமமாற்ற இடமளிப்பதனை சிங்களவர்கள் எதிர்க்கவில்லை. நாட்டின் சில அரசியல்வாதிகளே இதனை எதிரக்கினறனர்.

வடக்கில் விவசாயம் செய்யப்படாத தரிசு நிலங்களில், விவசாயம் செய்ய மக்களுக்கு அனுமதி அளிப்பதனை தெற்கு விவசாயிகள் ஒருபோதும் எதிர்க்கவில்லை. மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலை தூக்கக்கூடாது என்பதே சாதாரண மக்களின் பிரதான நோக்கம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு உள்ளிட்ட இந்த நாட்டின் சாதாரண மக்களுக்கு 13 பிளஸை விடவும் வேறும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

# 13ஆவது திருத்தத்துக்கு மேலான தீர்வு அரசிலிருந்து வெளியேறுவோம்

——— எச்சரிக்கிறார் அமைச்சர் விமல் ———

(கொழும்பு)



13 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் வழங்கினால் ஆளும் கட்சியிலிருந்து வெளியேற நேரிடும் என ஜே.என்.பி கட்சியின்தலைவரும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைய எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது கோரிக்கைகளை நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமர் ருத்ரகுமாரிடம் முன்வைக்க வேண்டுமென அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் அதிகாரங்களை பகிரக் கூடாது என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பசிலுடன் நெருக்கமெனக்கூறி மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்களாக தம்மைக் காட்டிக்கொண்டு, உடுருவ தெற்கு கிராமவாசிகளுக்கு அரச வங்கிகளிலும் சுங்கத் திணைக்களத்திலும் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்த இருவரை கல்கிரியாகமவில் வைத்து பொலிஸார் கைது செய் துள்ளனர்.

இவ்விருவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பசில் ராஜபகஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபகஷ ஆகியோரின் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்ட வாகனங்களில் அந்தப் பகுதிக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. தொழில்பெற்றுத் தருவதற்காக அவர்கள் பணமும் கோரியுள்ளனர்.

பொளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து வருவதாகக் கூறிக் கொண்ட அவர்கள், அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கான ஏற்பாடுகளுக்காக அப்பகுதிக்கு வந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அதை உறுதிப்படுத்துவதற்கு அவர்களிடம் ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

கெக்கிராவ நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட இச்சந்தேக நபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# புலிகளின் இரகசியங்களை வெளிப்படுத்துவாராம் கருணா



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இரகசியங்களை வெளிப்-படுத்த போவதாக மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் 'விநாயகமூர்த்தி' முரளிதரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை கவுன்ஸில் அமர்வுகளில் புலிகளின் இரகசியங்களை வெளிப்படுத்துவேன்.

விடுதலைப் புலிகள் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் வெளிப்படுத்துவேன். புலிகளின் சர்வதேச வலையமைப்பைச் சேர்ந்த தலைவர்களுக்கு சர்வதேசம் அடைக்கலம் வழங்கி வருகின்றது.

சம்பந்தன் தரப்பு ஜெனீவா செல்வதாக தகவல்கள் கிடைத்துள்ளன. கண்ணாடி மாளிகையிலிருந்து அவர்கள் கல் எறியக் கூடாது. பிரபாகரன் மேற்கொண்ட போர்க் குற்றச் செயல்கள் மற்றும் அரசியல்வாதிகளை கொலை செய்த தகவல்கள் என்னிடம் இருக்கின்றன.

விடுதலைப் புலிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து செயற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு நான் எச்சரிக்கை விடுக்கின்றேன்.

மேற்கு நாடுகளில் வாழும் புலித் தலைவர்களின் பெயர் பட்டியல் என்னிடம் இருக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்

# காணாமற்போன இலங்கை மீனவர் சோமாலிய கடற்கொள்ளையர் வசம்

(கொழும்பு)

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் காணாமற்போன 6 இலங்கை மீனவர்கள் சோமாலிய கடற்கொள்ளையர்கள் வசம் இருப்பதாகவும் இம்மீனவர்களை விடுதலை செய்ய கடற்கொள்ளையர்கள் 6 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கப்பமாக கோருவதாகவும் மீனவர்களது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் தனது சகோதரருடன் சேர்ந்து 6 மீனவர்கள் நீர்கொழும்பு கடலில் மீன்பிடிக்கச் சென்று ஒரு மாதங்களின் பின் அவர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாக நிரோசன் அந்தோணி என்பவர் தெரிவித்துள்ளார்.

தனது சகோதரனான சாந்த செபஸ்டியன் உள்ளிட்ட 6 மீனவர்களை விடுவிக்க சோமாலிய கடற்கொள்ளையர்கள் கப்பம் கோருவதாகவும் இன்றைய தினத்துக்கு முன்னர் வழங்கா விட்டால அவர்களைக் கொலை செய்வதாக அச்சுறுத்துவதாகவும் நிரோசன் அந்தோணி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தொலைபேசியில் அவர்கள் உரையாடும்போது துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும் கேட்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடிப்படை வசதிகளற்ற தாங்கள் என்ன செய்வதென்பதை அறியாது இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனவர்கள் கடத்தப்பட்டுள்ளதை உறுதி செய்துள்ள மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, மீனவர்களைக் காப்பாற்ற சோமாலிய அரசு உதவ முடியாது என தெரிவித்துவிட்டதாகக் கூறியுள்ளார்.

# ஆளுநர், முதலமைச்சர்களுக்கான எரிபொருள், தொலைபேசி படிகுறைப்பு

(கொழும்பு)

மாகாண ஆளுநர்கள், முதலமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள் முதலானோருக்கான தொலைபேசி, எரிபொருள் மற்றும் வாகனங் களுக்கான படிகளை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்க செலவினங்கள் தொடர்பாக மாகாண செயலாளர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க சுற்றுநிருபமொன்றை அனுப்பியுள்ளார்.

இதன்படி மாதமொன்றுக்கான எரிபொருள் 150 லீற்றர்களால் குறைக்கப்படும். முன்னர் இது 750 லீற்றர்களாக இருந்தது. இனிமேல் 600 லீற்றர் எரிபொருளே மாதமொன்றுக்கு வழங்கப்படும்.

டீசல் வாகனங்களுக்கான எரிபொருள் மாதாந்தம் 500 லீற்றர்களாக குறைக்கப்பட்டுள்ளது.

மாகாண அமைச்சர்கள், தவிசாளர்களுக்கான மாதாந்த பெற்றோல் 400 லீற்றர்களாகவும் டீசல் 300 லீற்றர்களாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளின் பிரதித் தவிசாளர் களுக்கான மாதாந்த பெற்றோல் அளவு 200 லீற்றர்களாகவும் டீசல் 150 லீற்றர்களாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

மாகாண ஆளுநர்கள் மற்றும் முதலமைச்சர்களின் பாவனைக்கும் பாதுகாப்புக்குமான வாகனங்களின் எண்ணிக்கை 3 ஆக குறைக்கப்படும். மாகாண அமைச்சர்களுக்கான வாகனங்கள் இரண்டாக மட்டுப்படுத்தப்படும். பிரதித் தவிசாளர்களுக்கான வாகன எண்ணிக்கை ஒன்றாகும்.

ஆளுநர்கள், முதலமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள், தவிசாளர்கள் ஆகியோருக்கான செல்லிடத் தொலைபேசி எண்ணிக்கை ஒன்றாக மட்டுப்படுதப்படும். செல்லிடத் தொலைபேசிகளுக்கான மாதாந்தக் கொடுபபனவும் மட்டுப்படுத்தப்படும்.

அத்துடன் தமக்கான ஊழியர்களைச் சேர்க்கும்போது அரசாங்க சேவையிலுள்ள தகுதியானோரை சேர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சாரதிகளை உத்தியோகபூர்வ கடமைகளுக்கு மாத்திரமே பயன்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சாரதிகளுக்கான மேலதிக வேலை நேரம் மாதாந்தம் 200 மணித்தியாலங்களாக மட்டுப்-படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை முடியுமான-வரை அரச கட்டடங்களை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், விசேட சூழ்நிலைகளில் மாத்திரமே தனியார் கட்டடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாள்தோறும் இரண்டு கிலோ போதைப் பொருள் பாவனை

(கொழும்பு)

நாள் தோறும் இலங்கையில் சுமார் இரண்டு கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் பயன்படுத்தப்படுவதாக தேசிய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு நாடு தழுவிய ரீதியில ஆய்வு ஒன்றை நடாத்தியுள்ளது. நாட்டில் சுமார் 45000 ஹெரோயின் போதைப் பொருள் பாவனையாளர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வருடாந்தம் 763 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. கொழும்பில் சுமார் 350 ஹெரோயின் விநியோகஸ்தர்கள் இயங்கிவருவதாகவும் இதில் 45 பேர் மொத்த வியாபாரிகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் விநியோகம் செய்வோர் மற்றும் பயன்படுத்துவோருக்கு எதிராக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் பல போதைப் பொருள் விநியோகஸ்தர்களுக்கு இலங்கை நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முதலீட்டுக்குச் சிறந்த இடம்

(கொழும்பு)

முதலீடுகளுக்கு இலங்கை சிறந்ததொரு மத்திய நிலையமாக மாறியுள்ளதாக சர்வதேச முதலீட்டு நிறுவனமொன்று தெரிவிக்கின்றது.

குறித்த நிறுவனம், இலங்கை அமெரிக்க வணிக சபையுடன் நேற்று உடன்படிக்கையொன்றில கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை அமெரிக்க வணிக சபை மற்றும் சர்வதேச முதலீட்டு நிறுவனம் என்பன கைச்சாத்திட்டுள்ள உடனபடிக்கை தொடர்பில விளககமளிப்பதற்காக கொழும்பில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்த உடன்படிக்கை மூலம் இலங்கையின் முதலீட்டுத் திட்டங்கள் பலவற்றுக்கு சந்தர்ப்பம கிடைக்கும் என இலங்கையில் உள்ள அமெரிக்க வணிக சபையின் தலைவர் விஜய ரத்னாயக்க குறிப்பிட்டார்.

52) B குழுவில் அதிக புள்ளிகளைப் பெற்றவரினதும் குறைந்த புள்ளியைப் பெற்றவரினதும் இடையிலான வித்தியாசம் யாது? அவர் எக்குழுவில் உள்ளார்?


53) இவ்விரண்டு குழுக்களிலும் வெற்றிபெற்ற குழு தோல்வி பெற்ற குழுவைவிட எத்தனை புள்ளிகள் அதிகமாகப் பெற்றுள்ளது?

54) 927 ரூபாவை மூன்று பேருக்குச் சமமாகப் பங்கிடும் போது ஒருவர் பெறும் பணத்தின் அளவு யாது?

55) கரன் 1 லீற்றர் 750 மில்லி லீற்றர் எண்ணையையும், கரன் வாங்கியதன் இரு மடங்கு எண்ணைய்யைத் தீபனும் வாங்கினான். இருவரும் வாங்கிய எண்ணையின் மொத்த அளவு யாது?


56) 50 பைக்கற்றுக்கள் கொண்ட பால்மா பெட்டி ஒன்றின் நிறை 12 Kg 750 g ஆகும். 450 பைக்கற்றுக்கள் கொண்ட பால்மாப் பெட்டியின் நிறை யாது?

57) பின்வரும் உருவிலுள்ள ஒவ்வொரு சிறிய சதுரத்தினதும் ஒரு பக்கத்தின் நீளம் 1 சென்ரிமீற்றர் ஆகும்.



உருவின் சுற்றளவு யாது? ..........................................

உருவின் பரப்பளவு யாது? ..........................................




58) மேலே தரப்பட்ட A, B ஆகிய இரண்டு சீலங்களினதும் மொத்த நீளம் யாது?

59) ஒரு குதிரை மணித்தியாலத்துக்கு 20 கிலோமீற்றர் வேகமாக ஓடும். 8 மணித்தியாலத்தில் எத்தனை கிலோமீற்றர் ஓடி முடிக்கும்?

60) $2/4 + 1/2 =$

61) 1 கிலோகிராம் வாழைப்பழத்தின் விலை 60.00 ஆகும். 1 கிலோகிராம் 250 கிராம் வாழைப்பழத்தின் விலை யாது?

62) ஒரு மண்ணெண்ணைக் கானில் 6 லீற்றர் 500 மில்லி லீற்றர் மட்டும் நிரப்பலாம். அப்படியானால் எத்தனை கானில் 39 லீற்றர் நிரப்பலாம்?

### கடந்த புதன்கிழமை வெளியான வெளியீடு - 23 கேள்விகளின் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. 4 | 08. 3 | 15. 1 | 22. 2 | 29. 3 | |
| 02. 4 | 09. 3 | 16. 2 | 23. 2 | 30. 3 | |
| 03. 1 | 10. 2 | 17. 2 | 24. 2 | கருத்துள்ள தெளிவான வாக்கியங்களுக்குப் புள்ளியிடுக. | |
| 04. 2 | 11. 1 | 18. 2 | 25. 3 | | |
| 05. 2 | 12. 4 | 19. 3 | 26. 1 | | |
| 06. 4 | 13. 1 | 20. 3 | 27. 3 | | |
| 07. 2 | 14. 1 | 21. 2 | 28. 3 | | |





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி

# கல்வி முரசு

வெளியீடு 24



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

மலைகளில் இருந்து சிறுசிறு நீர் ஊற்றுக்களாகத் தோன்றி அவற்றின் மூலம் வெளிவரும் நீரானது ஒன்று சேர்ந்து சிறுசிறு அருவிகளாக உருப்பெறுகின்றன. இச்சிறு அருவிகள் ஒன்றுசேர்ந்து ஆறுகளாகி அவை கடலைப் போய்ச் சேருகின்றன. ஆறு தரையில் ஓடும்போது அது காடு மலை எல்லாம் தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது. அப்போது அவை சில இடங்களில் பெரும் பள்ளத்தில் விழ வேண்டியும் ஏற்படுகின்றன. அப்படி ஆறு பள்ளங்களில் விழும் காட்சியானது மிக அழகானது. அவ்விடத்தை நீர்வீழ்ச்சி என்று அழைப்போம். தலவாக்கலைக்கு அருகில் உள்ள டெவன் நீர்வீழ்ச்சியைப் பார்த்தீர்களானால் இது உங்களுக்குப் புரியும். சில இடங்களில் ஆறு பாம்பு போல வளைந்து வளைந்து ஓடுவதையும் காணலாம்.

01) ஆறுகள் எங்கே உற்பத்தியாகின்றன?

..........................................

02) ஆறு கடைசியாக எங்கே போய்ச் சேருகின்றது?

..........................................

03) கொழும்பை வந்தடையும் ஆற்றின் பெயர் என்ன?

..........................................

04) மிருகங்கள் ஏன் ஆற்றை நோக்கிச் செல்கின்றன?

..........................................

05) நீர்த்தேக்கங்களை எவ்விடத்தில் கட்டுகின்றார்கள்?

..........................................

06) ஆற்றில் மனிதர்கள் அள்ளும் திண்மப் பொருள் எது?

..........................................

07) ஏன் நீர்த்தேக்கங்களைக் கட்டுகின்றார்கள்?

..........................................

08) நீரைச் சுத்தப்படுத்தப் பயன்படுத்தப்படும் பொருள் என்ன?

..........................................

**அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புங்கள்.**

09) “கவிஞன்” பாட்டை (பாடினான் / இயற்றினான்) ..........................................

10) பசுக்கன்று தன் தாயைக் கண்டு (கத்தியது / கூவியது) ..........................................

11) மேடையில் நின்ற அவன் (பாடினான் / படித்தான்) ..........................................

12) திக்குத் தெரியாத காட்டில் அவன் அலைந்து (திரிந்தான் / நடந்தான்) ..........................................

13) அவசரமாக அவன் தன் நடையைக் (திரிந்தான் / கட்டினான்) ..........................................

**பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தை எழுதுக.**

14) கல்லில் நாருரித்தல்

15) ஊமை கண்ட கனவு

**பொருத்தமான "அ" பகுதியுடன் "ஆ" பகுதியை இணைக்க.**

| | அ | ஆ |
|---|---|---|
| 16) | வைக்கோல் | வயலில் நெல் அறுவடையின் பின் எஞ்சும் பகுதி |
| 17) | சிவனொளிபாத மலை | மழையும் வெயிலும் ஒன்றாக வரும்போது தோன்றுவது |
| 18) | குர்ஆன் | முஸ்லிம்களின் புனித நூல் |
| 19) | வானவில் | வணக்கஸ்தலம் ஒன்று |

**பின்வரும் கருத்தினை தமிழில் எழுதுக.**

20) Look at me ..................................................

21) Good evening ..................................................

22) Break fast ..................................................

**சிங்களச் சொற்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

23) கெதர யன்ன ..................................................

24) கரவில ..................................................

25) பன்சலய ..................................................

**சரியான விடையின் கீழே கோடிடுக.**

26) பின்வருவனவற்றுள் இரவு நேரத்தில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?
1. முருங்கை 2. தாமரை 3. கறிவேப்பிலை 4. அகத்தி

27) பின்வருவனவற்றுள் அயடீன் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
1. தொண்டைக்கரப்பான் 2. நீரிழிவு 3. கண்டமாலை 4. யானைக்கால்

28) பின்வரும் விடைகளுள் தேசப்படங்களில் பெருந்தெருக்களைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியம நிறம் எது?
1. கறுப்பு 2. நீலம் 3. பச்சை 4. சிவப்பு

29) நுகர்வுக்கான வர்த்தகப் பொருள்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலச்சினை எது?
1. SLS 2. SOS 3. ISO 4. ISBN

30) தொல்பொருட்கள் பெறுமதி மிக்கதாகவும் கலைத்துவப் பெறுமதிமிக்கதாகவும் உள்ள இடம்.
1. எம்பிலிப்பிட்டிய 2. சிகிரியா 3. பானம 4. கொத்மலை

31) இரவு நேரத்தில் மலரும் பூ வகை எது?
1. நந்தியாவட்டை 2. தாமரை 3. நான்குமணிப்பூ 4. கடுபுல்

32) எலுமிச்சைப் பழச்சாற்றில் அதிகளவில் இருக்கும் போசனைப் பதார்த்தம் யாது?
1. கொழுப்பு 2. புரதம் 3. விற்றமின் C 4. கல்சியம்

33) கரப்பந்தாட்டக் குழு ஒன்றுக்குரிய வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவு?
1. ஆறு 2. ஏழு 3. பத்து 4. பன்னிரண்டு

34) நத்தை முட்டையின் நிறம் யாது?
1. வெள்ளை 2. மஞ்சள் 3. சிவப்பு 4. கபிலம்

35) எமது தேசிய விளையாட்டு எது?
1. சடுகுடு 2. எல்லே 3. கிரிக்கெட் 4. கரப்பந்தாட்டம்

**அடைப்பினுள் உள்ள சொற்களினுள் இருந்து திருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

| | | | | |
|---|---|---|---|---|
| பள்ளிவாசல் | நாம்புவ | தைனமோ | மடி | காக்கும்பலகை |
| பத்திரிப்பு | பாதட்டியல் | மின்சுருள் | மின்உயர்த்தி | மஸ்ஜித் |



36) உயரமான கட்டடத்தின் மேல்மாடிக்கு இலகுவாகச் செல்லப் பயன்படுத்தப்படும் சாதனம் எது?
..................................................

37) சைக்கிள் விளக்கினுக்கு மின்சக்தியை வழங்கும் உபகரணம் எது?
..................................................


38) வலையில் அகப்படும் மீன்கள் மூலையில் பெயர் எது?
..................................................

39) இஸ்லாம் மார்க்கத்தினரின் சமய வழிபாட்டின் பெயர் என்ன?
..................................................

40) அகழ்வுக் கைத்தொழில் மாணிக்கக் கற்கள் தாதுக்கள் கொண்ட கூடையின் பெயர் எது?
..................................................

**தாவரத்தின் பெயரை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க.**


| | | | |
|---|---|---|---|
| அகத்தி | ஊமத்தை | குன்றுமணி | கண்டங்கத்தரி |
| பிரண்டை | நெருஞ்சி | நெல்லி | கத்தரி |



41).............................. 42).............................. 43).............................. 44)..............................

**பின்வருவனவற்றின் பெயர்களை அடைப்புக்குறியில் இருந்து தெரிவுசெய்க.**


| | | | | |
|---|---|---|---|---|
| கும்பிடு பூச்சி | வண்டு | தேனீ | சிலந்தி | இலையான் |



45).............................. 46).............................. 47).............................. 48)..............................

**பின்வரும் வரைபைக் கொண்டு அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

இவ்வரைபானது 6 ஓவர்களில் A, B ஆகிய இரு குழுக்கள் பெற்றுக்கொண்ட ஓட்ட எண்ணிக்கை ஆகும். வரைபானது பெறப்பட்ட ஓட்டங்களின் எண்ணிக்கைக்கும் விளையாட்டு வீரர்களின் இலக்கத்திற்கும் எதிராக வரையப்பட்டுள்ளது.




49) ஆறு ஓவர்களிலும் குறைந்தளவான ஓட்டத்தைப் பெற்ற அணி எது? எத்தனை ஓட்டங்களைப் பெற்றது?
..................................................

50) குறைந்த ஓட்டத்தைப் பெற்ற வீரர் எந்தக் குழுவில் இருக்கின்றார்?
..................................................

51) B குழுவில் 1,2 வீரர்கள் இருவரும் பெற்ற ஓட்ட எண்ணிக்கைக்குச் சமமான ஓட்ட எண்ணிக்கையைத் தனியாகப் பெற்றவர் யார்? ..................................................

### 13 வயது ஒருநாள் கிரிக்கெட்

# ஸ்கந்தாவுடனான போட்டியில் தோல்வியடைந்தது சென்.ஜோன்ஸ்

(அளவெட்டி)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் ஒருநாள் கிரிக்கெட் 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் 'பி' அணியை தெல்லிப்பளை மகாஜனா வெற்றி கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனா அணி 47 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பாக முரளி 40, பிரகாஸ் 30, புருஷோத் 35 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் அபிநாஸ் 5, பிரதீபன் மற்றும் விநோ இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

212 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ்அணி 41 ஓவர்களில் அனைத்து வீக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டஙகளை மட்டுமே பெற்றதனால் 38 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

அந்த அணி சார்பாக டானியல் 18 , கபில்ராஜ் மற்றும் அலெக்சன் இருவரும் தலா 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சரண்ராஜ் 4. டினேஸ் 3, பிரகாஸ் மற்றும் சுஜீவன் இருவரும் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அடுத்த போட்டியில் தெல்லிப்பளை மகாஜனா இசுரு பாடசாலையான ஷபரணையோடு மோதவுள்ளது. (93)

# மன்னார் பொது மைதானம் பராமரிப்பின்றி சீர்கேடு

(மன்னார்)



மன்னார் நகர சபையின் கண் காணிப்பில அமைநதுள்ள மன்னார் பொது விளையாட்டு மைதானம் சீரற்ற முறையில் காணப்படுவதாகவும் இதனால் உடற் பயிற்சிகளை மேற் கொள்ள முடியாமல் மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மழைக் காலங்களில் மைதானம் முழுவதும் நீர் நிறைந்து விடுகின்றது. மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடம் உரியமுறையில் பராமரிக்கப்படுவதில்லை குடிநீர்ப் பிரச்சினையும் ஏறபட்டுள்ளது. இதனால் இந்த மைதானத்துக்கு விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக வரும் விளையாட்டு வீரர்கள் பல்வேறு அசௌகரியஙகளை எதிர்கொள்கின்றனர்.எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி மைதானத்தை புனரமைத்துத் தருமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சதுரங்கப் போட்டி இன்று ஆரம்பம்

வடமாகாணப் பாடசாலைகளில் கல்வி பயிலும் இளையோருக்கான மாகாண மட்டச் சதுரங்கப்போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்குத் தெரிவு செயயப்பட்ட மாணவ, மாணவியர தவறாது பங்குகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஐந்து சுற்றுக்களாக நடைபெறும் இந்தப் போட்டி ஞாயிறு வரை தொடர்ந்து நடைபெறும்.

இந்தப் போட்டிமுடிவில் வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்படும் வீரர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெறுவர்.

தேசிய மட்டப்போட்டியில் வெற்றிபெறும் மாணவ மாணவியர் இந்த வருடம் யூன் மாதம் நடைபெறும் ஆசிய இளையோருக்கான சர்வதேசப் போட்டியில் பங்குபெறும் அரிய வாய்ப்பைப் பெறுவர். (23)

# "விக்ரம் ராஜன் கங்கு" ஞாபகார்த்த வன்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் 'விக்ரம் ராஜன் கங்கு' ஞாபகார்த்த வன்பந்துக் கிரிகெட் சுற்றுப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

நாளை முதல் 7ஆம் திகதி வரை இந்தப் போட்டிகள் இடம் பெறும்.

நாளை காலை 8.30 மணிக்கு யாழ்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக கழகத்தை எதிர்த்து யாழ். கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக்கழகமும் மதியம் 01 மணிக்கு யாழ். அரியாலை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு அணியும் மோதவுள்ளது.

5 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். அரியாலை விளையாட்டுக்கழகமும் மதியம் 1 மணிக்கு யாழ்.கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணி மோதவுள்ளது.

7ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணியும் மதியம் 1 மணிக்கு யாழ். கொக்குவில் மத்திய சனசமூகவிளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். அரியாலை விளையாட்டுக் கழகமும மோதவுள்ளது.

விளையாட்டுச் செய்திகள்


# மெய்வல்லுநர் போட்டிகள்

(நெல்லியடி)

கொக்கிளாய் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.(17)

# பூநகரி மகாவித்தியாலய மரதன் ஓட்டப்போட்டி



(முழங்காவில்)

பூநகரி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் ஆரம்ப நிகழ்வாக ஆண், பெண் வீரர் வீராங்கனைகளுக்கான மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றுள்ளது.

63 ஆண்களும் 39 பெணகளும் இந்தப் போட்டியில் பங்கு பற்றினர். பாடசாலையின் ஆரம்பத்துக்கு பூநகரி பரந்தன் வீதி வாடியடி ஊடாக பாடசாலை முடிவடத்தை மீண்டும் வநதடைந்தனர். பெருந்திரளான மக்கள் வழிநெடுகிலும் காத்திருந்து மாணவர்களை உற்சாகமூட்டினர்.

ஆண்கள் பிரிவில் 1ஆம் இடம் - பெ.ருஜிந்தன், 2ஆம் இடம் இ.நிதர்சன், 3ஆம் இடம் சி.சிவநவநீதன். பெண்கள் பிரிவில் - 1ஆம் இடம் - சி.தர்மினி, 2ஆம் இடம் உ.சசீனா, 3ஆம் இடம் ர.சுதர்சினி. (112)

# முதலாவது ருவென்ரி 20 தோல்வி; மழை காரணம் என்கிறார் டோனி



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியுடனான முதலாவது ருவென்ரி 20 தோல்விக்கு மழைதான் காரணமென இந்திய அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

முதலில் துடுப்பெடுத்தாடியிருக்க வேண்டும். ஆடுகளம் இரண்டாவது துடுப்பாட்டத்துக்கு மிகவும் கடினமாக இருந்தது. அதே சமயம் மழையால் இங்கிலாந்தில் எவ்வளவு கஷடப்படடு விளையாடினோம் என்பதையும் மறந்து விடக்கூடாது. அங்கு ஒரு நாள் தொடரில், நாம் எந்த ஒரு ஆட்டத்திலும் நாணயச் சுழற்சியில் வெல்லவில்லை.

ஆனால் நான் நினைத்தது மாதிரி நடக்க வில்லை. மழையின் தாக்கத்தால் நமது சுழற் பநது வீச்சாளர்கள் பந்து வீச சிரமப்பட்டனர். ஈரபபதம் காரணமாக, பந்தைப் பிடித்து சரியான இலக்கில் வீச முடியவில்லை.

ஆனால், இந்திய அணி துடுப் பாட்டம் செய்த போது நிலைமை மாறிவிட்டது. அப்போது மழை ஏதும் பெய்யவில்லை. இதனால் ஆடுகளத்தில் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக பந்து நன்கு சுழல ஆரம்பித்தது. அவர்களால் பந்தை நன்றாகப் பிடித்து வீச முடிந்தது. பழைய பந்து வழக்கத்தை விட அதிகமாக எகிறவும் செய்தது. இதனால் ரன்கள் குவிக்க எங்களுக்கு கடினமாகி விட்டது.

மொத்தத்தில் வானிலை ஆட்டத்தில் முக்கிய பங்கு வகித்தது. இருப்பினும் ஓரளவு நல்ல தொடக்கம் (5.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டுக்கு 47 ரன) கிடைத்தது. ஆனால் அதனை பயன்படுத்திக் கொள்ளத் தவறி விட்டோம்.

அவுஸ்ரேலிய அணியில் மேத்யூ வாட்டின்ஆட்டம் அருமையாக இருந்தது. அவருக்கு டேவிட் ஹஸி, வோர்னர் உறுதுணையாக இருநதனர். விளையாட்டில் சிறப்பாக விளையாட அணி வெற்றி பெறும். அந்த வகையில் அவுஸ்ரேலிய அணி வெற்றி பெற்றிருக்கிறது. எமது தோல்வியை மறக்க முயறசிக்கிறோம். மெல்போர்னில் சிறப்பாகச் செயற்படுவோம். எனத் தெரிவித்தார்.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே நேற்று முன்தினம் நடந்த முதலாவது ருவென்ரி 20 ஒருநாள் போட்டியில் இந்திய அணி 31 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுககளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 6 விக்கெட்டுக் களை இழந்து 140 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

# ஒலிம்பிக் தொடக்க போட்டியில் 20 ஆயிரம் கலைஞர்கள் பங்கேற்பு

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் தொடஙகி நடைபெறவுள்ளது இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தீவிரமாக நடந்து வருகின்றன. ஒஸ்கார் விருது பெற்ற "ஸ்லம்டாக் மில்லினர்" ஹொலிவுட் படத்தை இயக்கிய இயக்குனர் டேனிபயல் ஒலிம்பிக் போட்டிக்கான தொடக்க நிகழ்ச்சிகளை இயக்குகிறார்.

தொடக்க நாளில் நடைபெறும் கண்கவர் இசை நிகழ்ச்சிக்காக ரூபா 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 10 ஆயிரம் கலைஞர்கள் கலந்து கொள்ளும் வகையில் 3 மணி நேரம் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. ஷேக்ஸ்பியரின் "தி டெம்பஸ்ட" நாடகத்தை மையமாக வைத்து இந்த இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

# உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தல்; சோனியாகாந்தி - மாயாவதி தீவிர பிரசாரம்




(புதுடில்லி)

உத்தரப்பிரதேச சட்டசபைக்கு 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது இதில் முதல் கட்ட தேர்தல் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனால் முதல் கட்ட தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் பிரசாரம் சூடு பிடித்துள்ளது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கொண்டா, தியோரியா பகுதிகளில் நடைபெறும் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு திரட்டுகிறார்.

முதல் மந்திரி மாயாவதியும் பிரசாரத்தை தீவிரப்படுத்தி உள்ளார். அவர் சிடாபுர், பாரபங்கி பகுதிகளில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேபோல் அமேதி, ரேபரேலி தொகுதிகளில் 3ஆம் திகதி முதல் பிரியங்கா காங்கிரஸுக்கு ஆதரவாக பிரசாரம் செய்யத் திட்டமிட்டுள்ளார். இது தவிர சில குறிப்பிட்ட தொகுதிகளிலும் அவர் பிரசாரம் செய்யத் திட்டமிட்டுள்ளார்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல்காந்தி கடந்த சில வாரங்களாக உத்தரப்பிரதேச மாநிலத்தில் தங்கி இருந்து பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி விடுத்த தேர்தல் அறிக்கையில் அடுத்த 5 ஆண்டுகளில் 20 இலட்சம் பேருக்கு வேலை வழங்கப்படும். முஸ்லிம்களுக்கு 4.5 சதவீதம் துணை ஒதுக்கீடு வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தே.மு.தி.க.வுக்கு இறங்குமுகம்; ஜெயலலிதா - கருணாநிதி ஒற்றுமை

(சென்னை)


தமிழக சட்டசபையிலிருந்து தே.மு.தி.க.வை வெளிநடப்பு செய்தது தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதி கருத்துத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் நடந்த சட்டசபைக்கூட்டத்தில் அ.தி.மு.க. வுக்கும் தே.மு.தி.க. வுக்கும் இடையே காரசார மான வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த வாக்குவாதத்தில் தே.மு.தி.க. சட்ட மன்ற உறுப்பினர்களை அவைத்தலைவர் சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

இதுகுறித்து தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதி பத்திரிகையாளர்கள் சந்திப்பில், அ.தி.மு.க. எதிர்க்கட்சிகளை தன்னுடைய தனிப் பாணியில் நடத்துவதை இன்னும் விடவில்லை.

மேலும் தே.மு.தி.க. மற்றும் அ.தி.மு.க. மோதல் எதிர்பார்த்தது தான். தே.மு.தி.க.விற்கு இறங்குமுகம் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியிருப்பது சாதாரண விடயம் தான் என்றும் கருணாநிதி கருத்துத் தெரிவித்துள்ளார்.



தானே புயல் நிவாரணத்துக்கு ஜெயலலிதாவிடம், நடிகர் கமலஹாசன் 15 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கினார்!

# மாயாவதியின் மதுபான நண்பர் வீட்டில் வருமானவரித்துறையினர் சோதனை

(புதுடில்லி)

உத்திர பிரதேச மாநில முதல்வர் மாயாவதியின் நண்பரும் மதுபான உரிமையாளருமான பாண்டி சத்தா வீடுகள் மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தியுள்ளனர்.


உத்திர பிரதேச மாநிலத்தில் சட்டசபைக்கான தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் மாநில முதல்வர் மாயாவதிக்கு நெருக்கமானவர்களின் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் வருமானவரித துறையினர் சோதனை நடத்தியுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக சினிமாத் தயாரிப்பாளரும் மாநில மதுபான நிறுவனங்களின் தலைவர் பாண்டிசத்தா என்பவருக்குச் சொந்தமான இடங்களில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தியுள்ளனர்.

இந்தச் சோதனையில் சுமார் 20இற்கும் மேற்பட்ட அதிகாரிகளை கொண்ட குழுவினர் பங்கேற்றனர். நெய்டா மற்றும் புதுடில்லி உட்பட 13இற்கும் மேற்பட்ட இடங்களில் 200இற்கும் மேற்பட்ட அதிகாரிகளால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தேர்தல் நேரத்தில் சட்ட விரோதமாக மது விற்பனை நடைபெறுவதைத் தடுக்கும் நோக்கத்தில சோதனை நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பெண் குழந்தைகள் இறப்பு; முதலிடம் பிடித்தது இந்தியா



(புதுடில்லி)


உலக அளவில் பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் இந்தியாவில்தான் அதிகம் என்று புதிய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா.சபையின் பொருளாதாரம் மற்றும் சமூக விபரங்களுக்கான துறை சமீபத்தில் புதிய புள்ளி விபரம் ஒன்றை வெளியிட்டது. 150 நாடுகளில் பிறப்பு- இறப்பு விபரங்களை சேகரித்து தயாரிக்கப்பட்ட, அந்தப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது,

உலகில் இந்தியாவில்தான் கடந்த 10 ஆண்டுகளில் ஆண் சிசுக்கள் மற்றும் குழந்தைகளின் இறப்பை விட, பெண் சிசுக்கள் மற்றும் குழந்தைகளின் இறப்பு அதிகமாக உள்ளன. இதனால் ஆண்-பெண் விகிதாசாரத்தில் மிகப் பெரிய இடைவெளி ஏற்பட்டு வருகிறது. இந்த நிலை வரவேற்கத்தக்கதல்ல. இந்தியாவுக்கு அடுத்த நிலையில் சீனா உள்ளது.

உலகில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட இரண்டு நாடுகளில் இவ்வாறான நிலை இருப்பது கவலை அளிக்க கூடியது. குழந்தைகள் இறப்பு விகிதம் இந்தியாவிலும் 100:56 என்ற விகிதத்தில் உள்ளது. கடந்த 1970ஐ விட இப்போது நிலைமை மோசம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

பெண் குழந்தைகள் இறப்பு விகிதம் முன்பு அதிகமாக இருந்த எகிப்து, இலங்கை, ஈராக் போன்ற நாடுகள் இன்று அதை குறைத்து விட்டன. இங்கு பெண் சிசுக்கள் மற்றும் குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைந்து வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சீனாவுடன் மோதலுக்கு தயாராகிறது இந்தியா?

(வோஷிங்டன்)

சீனாவுடன் மோதலுக்கு இந்தியா தயாராகி வருகிறது என அமெரிக்க உளவுத்துறை அறிவித்துள்ளது.

எல்லைப் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் குறித்து இந்தியாவிற்கு கவலை ஏற்பட்டுள்ளதால், சீனாவுடனான மோதலுக்கு இந்தியா தயாராகி வருகிறது என அமெரிக்க உளவுத்துறை அதிகாரி தகவல் வெளியிட்டுளளார்.

வெளிப்படையான அறிவிப்புகள் இந்தியா, சீனா இடையேயான பதற்றத்தை தணித்திருந்தாலும், தங்களது எல்லைப் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் குறித்து இந்தியாவின் கவலை அதிகரித்துள்ளதாக நாங்கள் மதிப்பிட்டுள்ளோம் என்று தேசிய புலனாய்வு அமைப்பின் தலைவர் ஜேம்ஸ் கிளாப்பர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையே உடனடியாக பெரிய அளவில் போர் நிகழாது என்று இந்திய இராணுவம் நம்புகிறது.

எனினும் எல்லைப் பகுதியில் சிறிய அளவிலான மோதலுக்காக தயார்ப்படுத்த இந்தியா தனது படைகளை வலுப்படுத்தி வருகிறது என ஜேம்ஸ் கூறியுள்ளார்.



இந்தியாவின் மகாராஸ்ஷ்ரா மாநிலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களுக்காக மகராஷ்டிர நவநிர்மான சேனா கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் உலகை ஈர்த்த நட்சத்திரமாக களமிறங்கியுள்ளார்.ஜோதி என்ற சிறியபெண் தற்போது பதினெட்டு வயதாகும் குறித்த பெண்ணின் உயரம் 2 அடி 6 அங்குலம் மட்டுமே ஆகும்.

# தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் இன்று கனிமொழி பங்கேற்பார்



(சென்னை)

ஸ்பெக்ட்ரம் வழக்கு நடைபெறும் சி.பி.ஜ. சிறப்பு நீதிமன்றம் நேற்றும் இன்றும் விடுமுறை என அறிவித்துள்ளதால் எந்தச் சிரமமும் இல்லாமல், சென்னையில் நடைபெறும் தி.மு.க. பொதுக் குழுவில் கனிமொழி பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

"2ஜி" ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தி.மு.க. எம்.பி. கனிமொழி, புதுடில்லி பாட்டியாலா நீதிமன்றில் தவறாமல் வழக்கு விசாரணைக்கு ஆஜராகி வருகிறார். இந்நிலையில், தி.மு.க.வின் பொதுக்குழு கூட்டம் இன்று சென்னையில் நடைபெறுகிறது. ஸ்பெக்ட்ரம் வழக்கில் சிறை சென்ற கனிமொழிக்கு தி.மு.க. வில் முக்கிய பதவி வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பும் அந்தக்கட்சியினரிடையே வலுத்து வருகிறது.

இந்நிலையில் "2ஜி" வழக்கு விசாரணையில், கனிமொழி கலந்து கொள்ள வேண்டும் என்பதால், அவர் சி.பி.ஜ. நீதிமன்றில் சிறப்பு அனுமதி பெறுவார் என்று கூறப்பட்டது. ஆனால் நேற்றும் இன்றும் வழக்கு விசாரணை பாட்டியாலா நீதிமன்றில் நடைபெறாது என 'நீதிபதி ஷைனி உத்தர விட்டுள்ளார். இதனால், சென்னையில் நடைபெறும் தி.மு.க. பொதுக் குழுவில் கனிமொழி கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தியச் செய்திகள்

உலகச் செய்திகள்

# ஆசிய நாடுகள் வளங்களை பாதுகாக்க அமெரிக்காவின் உதவியை நாடுகின்றன

## - ஒபாமா பெருமிதம்

(வோஷிங்டன்)

தங்கள் நாடுகளை மேம்படுத்திக் கொள்ளவும், சீனாவிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஆசிய நாடுகள் அமெரிக்காவின் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார்.

அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் நடந்த தேர்தல் பிரசார நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய ஒபாமா கூறியதாவது, கடந்த மூன்றாண்டுகளில் நாம் அனேக பிரச்சினைகளைக் கடந்து வந்து விட்டோம்.

அதே காலகட்டத்தில் நான் உலகம் முழுவதும் சுற்றிப் பார்த்தபின் ஒன்றைத் தெளிவாக தெரிந்து கொண்டேன். அது உலகம் இன்னும் நமது தலைமையை எதிர்பார்த்திருப்பதுதான். நம்மிடம் உள்ள அதிகாரத்திற்காக அவர்கள் நம்மை எதிர்பார்க்கின்றனர். ஆசியாவில், சீனாவின் வளர்ச்சியை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். அவர்களின் பொருளாதார எதிர்காலம் நம்மோடு மட்டுமல்ல, அசுர வேகத்தில் வளர்ந்து வருவதை அவர்கள் உணர்ந்துள்ளனர்.

அதனால் ஆசியாவின் அச்சிறிய நாடுகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தங்களின் இயற்கை வளங்கள் சுரண்டப்படாமல் முறையாக மேம்படுத்தவும் விரும்புகின்றனர். அதனால் அவர்கள் நம்மை விரும்புகின்றனர் என்று தெரிவித்தார்.

# கால்பந்தாட்ட மைதான மோதலில் 74பேர் பலி; ஆயிரத்திற்கும் மேல் காயம்



(கெய்ரோ)

எகிப்து நாட்டிலுள்ள கால்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற கலவரத்தில் 74பேர் உயிரிழந்ததுடன் ஆயிரம் பேருக்கு மேல் காயமடைந்தனர். கால்பந்து விளையாட்டில் உலகின் மிகச்சிறந்த அணிகளில் எகிப்து நாட்டு கால்பந்து அணியும் ஒன்றாகும். அந்த நாட்டில் ஏராளமான கால்பந்து கிளப்புகள் உள்ளன.

நேற்றுமுன்தினம் எகிப்து நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள போர்ட்செட் நகரில் நடந்த பிரிமீயர் லீக் போட்டியில் அல்அலி கிளப் அணியும் அல்-மஸ்ரி கிளப் அணியும் மோதின. இதில் அல்அலி அணி எகிப்தில் உள்ள கிளப் அணிகளில் மிகவும் புகழ்பெற்ற, பலம் வாய்ந்த அணி என பெயர் பெற்றதாகும்.

போட்டியைக் காண ஸ்ரேடியத்தில் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டிருந்தனர். எகிப்து நாட்டு தொலைக்காட்சியில் இந்தப் போட்டி நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. இரு அணிகளையும் ரசிகர்கள் ஆரவாரம் செய்து, உற்சாகப்படுத்தியபடி இருந்தனர்.

போட்டியில் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட அல்அலி கிளப் அணி தோல்வி அடைந்தது. அல்-மஸ்ரி கிளப் அணி 3-0 என்ற கோல் கணக்கில் அல்அலி அணியை வீழ்த்தியது. இதனால் அல்-மஸ்ரி கிளப் ரசிகர்கள் வெற்றி கோஷமிட்டு ஆரவாரம் செய்தபடி இருந்தனர்.

இதை அல்அலி கிளப் ரசிகர்கள் எதிர்த்தனர். இதனால் மைதானத்தில் திடீர் கலவரம் வெடித்தது. நடுவர் போட்டி முடிந்ததாக இறுதி நீண்ட விசில் ஊதிய மறு வினாடி, அல்-மஸ்ரி ரசிகர்கள், மைதானத்துக்குள் நாலாபுறமும் இருந்து கூச்சலிட்டப்படி ஆவேசமாக புகுந்தனர்.

அதிர்ச்சி அடைந்த ரசிகர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார். என்றாலும் அல்-மஸ்ரி அணியை ஆதரிக்கும் ரசிகர்கள் ஓட, ஓட விரட்டி கத்திக்குத்தில் ஈடுபட்டனர். ஸ்டேடியத்தில் மிக, மிக குறைவான பொலிஸாரே பாதுகாப்பில் இருந்தனர். இதனால் அவர்களால் கலவரத்தை கட்டுப்படுத்த இயலவில்லை. சுமார் 30 நிமிடம் இரு கிளப் வீரர்களும் ஒருவரையொருவர் கத்தியால் குத்தி, ரத்த வெள்ளத்தில் சாய்ந்து விழுந்தனர். இராணுவம் வந்த பிறகே நிலைமை கட்டுக்குள் வந்தது

# ஆப்கானிலுள்ள இராணுவத்தை வாபஸ்பெற அமெரிக்கா திட்டம்



ஆப்கானிஸ்தானில் இருந்து ஒரு ஆண்டுக்கு முன்பே அமெரிக்க இராணுவம் வாபஸ் ஆகிறது. அமெரிக்காவில் கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி அல் கொய்தா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். அதை தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் உதவியுடன் பதுங்கி அவர்களை வேட்டையாடும் பணியில் அமெரிக்கா ஈடுபட்டது.

அதை தொடர்ந்து அங்கு அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படை முகாமிட்டு தீவிரவாதிகளை அழித்து வருகிறது. அங்குள்ள நேட்டோ படையில் 99 ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். அந்தப் படை வீரர்களை வருகிற 2014ஆம் ஆண்டில் முழுவதும் வாபஸ் பெறுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. தற்போது ஒரு வருடத்துக்கு முன்னதாக படைகளை வாபஸ் பெற அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. ஆண்டு இறுதியில் 22 ஆயிரம் வீரர்களையும், அடுத்த ஆண்டில் (2013) முழுவதும் வாபஸ் பெறப்பட உள்ளது. இந்த தகவலை அமெரிக்க இராணுவ மந்திரி பனேட்டா அறிக்கை தாக்கலின் போது வெளியிட்டார்.


ஆப்கானிஸ்தானில் தற்போது நிலைமை ஓரளவு சீரடைந்து வருகிறது. மேலும் தலிபான் தீவிரவாதிகளை சமாளிக்க ஆப்கானிஸ்தான் இராணுவத்துக்கு அமெரிக்க இராணுவ வீரர்கள் பயிற்சி அளித்து வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

# வயிற்றுப்புண் மருந்தால் எலும்பு முறிவு ஏற்படும்

## மருத்துவ ஆய்வுக்குழு தகவல்

வயிற்றுப்புண் மற்றும் நெஞ்சு எரிச்சலுக்கு பி.பி.ஐ. என்ற ஒருவகை மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இந்த மருந்து கடும் பக்க விளைவுகளை ஏற்படுத்துவதாக அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் மசாசிஸ்ட் மருத்துவ ஆய்வுக் குழு கூறியுள்ளது.

இந்த மருந்துகளைச். சாப்பிடும்போது அவை மெல்ல, மெல்ல எலும்புகளை பலவீனப்படுத்துவதாகவும், அதன் மூலம் 45 வயதிற்கு மேல் எலும்பு முறிவுகளை ஏற்படுத்துவதாகவும் அந்தக்குழு அதிலும் பெண்கள் இந்த மருந்தைச் சாப்பிட்டபின்பு கடும் பாதிப்பைச் சந்திப்பதாகவும், தெரிவித்த[illegible]




பெண்களுக்கு மாதவிடாய் நின்ற பிறகு அவர்கள் பலவீனமாகி விடுவார்கள். அப்போது இந்த மருந்து அதிக பாதிப்பை ஏற்படுத்தி இடுப்பு எலும்புகளை சேதப்படுத்துவதாகவும் அதன் மூலம் முறிவு ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் அந்தக்குழு கூறியுள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஹிட்லர் காலத்து ஜெர்மனிய மக்களில் அனைவருமே ஈவிரக்கமற்றக் கொலைகாரர்களா என்ன? இல்லை. அவர்களும் சாதாரண மனிதர்களே. ஆனால் அவர்கள் முழுக்க முழுக்க அமைப்பைச் சார்ந்திருந்தார்கள். அந்த அமைப்பு தீமையைச் செய்ய ஆரம்பித்தபோது அவர்களும் அதைச் செய்தார்கள். அந்த அமைப்பை மீறிச்சென்று தனிமனிதர்களாகச் சிந்தனை செய்தவர்கள், தாங்கள் சார்ந்திருக்கும் அமைப்பின் துரோகிகள் என்றாவதைக் கவனிக்கலாம்.

ஒரு திரளாக மனிதர்கள் சிந்திக்கும்போது தன் திரளின் நலம் மட்டுமே திரண்டு வரமுடியும். அமைப்புமனிதர்கள் அன்பின், கனிவின் தளத்தில் சிந்திக்க முடியாது. பெரும் இன மதக் கலவரங்களில் எளியமக்கள் மனிதாபிமானத்தை இழந்து சொல்லரும் கொடுமைகளைச் செய்வது இதனாலேயே. முன்பின் தெரியாத ஒருவனைக் கொல்ல அவர்களால் முடிவதன் உளவியலே இதுதான்.

மனிதாபிமானம் என்பது ஒருவன் தனிமனிதனாக தன் அந்தரங்கத்தில் உணரக்கூடிய ஒன்று. மனிதர்கள் தனி மனிதர்களாக மட்டுமே தங்கள் ஆன்மீக ஆழத்தைக் கண்டடையவும் தங்கள் முழுமையையும் மீட்பையும் அடையமுடியும். கூட்டான மக்கள்திரள் என்பது லௌகீகமான சுயலாபத்தை அடைவதற்கு மட்டுமே உரியது.

இந்த விஷயத்துக்கு தொடர்ச்சியாகச் சொல்லப்பட வேண்டியது யூதர்களின் பிற்கால வரலாறு. யூதர்கள் கடும் அடக்குமுறைக்கும் இன ஒதுக்குதலுக்கும் உள்ளானார்கள். ஆகவே அவர்கள் பின்பு அமைப்பாகத் திரண்டார்கள். தங்களுக்கான நாடு ஒன்றை உருவாக்கினார்கள். ஆனால் அவர்கள் அகிம்சையையோ மனிதாபிமானத்தையோ நம்பும் நாடாக உருவாகவில்லை. பிறர்மீது அடக்குமுறையை ஏவ சற்றும் தயங்காத நாடாகவே உருப்பெற்றிருக்கிறார்கள். அமைப்புமனிதர்களால் அழிக்கப்பட்டவர்கள் அமைப்பு மனிதர்களாக ஆனார்கள்.

**– நித்ய சைதன்யா**

வெற்றி பெற்ற ஒவ்வொருவனும் களையெடுக்கும் உரிமையைத் தன் கைகளில் எடுத்துக் கொள்கிறான். ஆனால், அவன் அதை எடுத்துக் கொள்ளும் முறையில் தன் குற்றத்திற்குத் திரை போடும் சாதகமான சாட்சியத்தைத் தேடி அலையும் விருப்பமும் உள்ளடங்கியிருக்கிறது. **– ரோல்ஸ்ரோய்**

நம் கலாசாரத்தன்மை வெட்கமற்றது; சுயபோதம் அற்றது; தலைகுனிவுகளுக்குரிய பொறுப்பின்மையில் திளைத்துக் கொண்டே மீசையில் கைபோட்டு வீறாப்பு பேசக்கூடியது.

**– சுந்தர ராமசாமி**

எதனுடனும் தங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்பது போல் நடந்துகொள்ளும் மனிதர்கள்தான் சமூகத்தை மிகவும் பயமூட்டுபவர்களாக உள்ளார்கள். **– ஜெயகாந்தன்**

கட்டாயச் சூழலில் தோன்றும் ஒற்றுமை உணர்வு கேள்விக்குரியதே! மற்றவர்களை மாட்ட வைத்து முதலில் எப்படி நாம் தப்பலாம் என்பதையே ஒவ்வொருவரும் முக்கியமாக நினைப்பார்கள். **– ஸ்ரீலால் சுக்ல**

உங்கள் கடந்தகால நிகழ்ச்சிகளில் நீங்கள் உங்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை மட்டுமே காண்கிறீர்கள். மனச்சாட்சி போடும ஒவ்வொரு வரவு செலவுக் கணக்கையும் தன்னைப் பற்றிக் கழிவிரக்கம் கொள்ளவும் ஒரு சந்தர்ப்பமாக அந்த மனச்சாட்சி பயன்படுத்திக் கொள்கிறது. தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களையே நினைத்து வருத்தப்பட்டு அதன்மூலம் தன்னைத் தானே புகழ்பாடும் மனப்பான்மையை நான் மதிக்க முடியாது. வேண்டுமென்றே இப்படி ஒருவர் வருந்தும் போக்கை நான் வெறுக்கிறேன். அதனால் உண்மையான துயரத்தையோ, தியாகம் செய்தவரின் கடும் மனத் துயரையோ புரிந்துகொள்ள ஒருவனால் இயலாது. மற்றவர்களின் துயரங்கள், மற்றவர்களின் வேதனைக் கதறல், மற்றவர்களின் மரண பயம் ஆகியவற்றை நம் நினைவில் தேடும் பழக்கத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். **– நிரபராதிகளின் காலம்**

முற்றிலும் குற்றமற்ற தன்மை என்பது செத்துப்போனவர்களுக்கு மட்டுமே உரித்தான தனிச் சிறப்பு. வாழ வேண்டிய அவசியம் என்று கருதும் எவரும் குற்றவாளியாவதைத் தவிர வேறு வழியில்லை. – காஃப்கா

நடுநிலை என்பது நடுவில் வந்து நின்று நெஞ்சைத் துருத்துவதல்ல. இரு பக்கங்களையும் பார்ப்பது. சமூக வளர்ச்சியை முன்னிலைப்படுத்தும் பெருங்கருணை அது.

**– சிவராம காரந்த்**

# ஒரு ஆசிரியரைக் கொண்ட பாடசாலை வடக்கு மாகாணத்தில் மட்டும் 58

(கொழும்பு)

இலங்கையில் ஒரேயொரு ஆசிரியரை மாத்திரம் கொண்டியங்கும் 92 பாடசாலைகள் உள்ளதாகவும் இரு ஆசிரியர்களை மாத்திரம் கொண்டுள்ள 168 பாடசாலைகள் உள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

வடமாகாணத்தில் 58 பாடசாலைகளில் தலா ஒரு ஆசிரியரே உள்ளனர். மேல் மாகாணத்தில் இத்தகைய 3 பாடசாலைகள் உள்ளன.

மத்திய மாகாணத்தில் 9 பாடசாலைகளிலும் கிழக்கு மாகாணத்தில் 9 பாடசாலைகளிலும் சப்ரகமுவ மாகாணத்தில் 5 பாடசாலைகளிலும் வட மத்திய மாகாணத்தில் 3 பாடசாலைகளிலும் ஊவா மாகாணத்தில் இரு பாடசாலைகளிலும் தென் மாகாணத்தில் ஒரு பாடசாலையிலும் தலா ஒரு ஆசிரியர் மாத்திரம் உள்ளனர். வட மாகாணத்தில் 48 பாடசாலைகளில் தலா இரு ஆசிரியர்கள் மாத்திரம் உள்ளனர். மத்திய மாகாணத்தில் இத்தகைய 29 பாடசாலைகள் காணப்படுகின்றன.

கல்வி அமைச்சின் திட்டமிடல் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விபரங்களின்படி, 254 பாடசாலைகள் தலா 3 ஆசிரியர்களை மாத்திரம் கொண்டுள்ளன. 4 ஆசிரியர்களை மாத்திரம் கொண்டுள்ள 375 பாடசாலைகள் உள்ளன.

இலங்கையில் 9790 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 1552 பாடசாலைகள் 50 பேரைவிட குறைந்த எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளாகும். அதேவேளை 2500 மாணவர்களைவிட அதிகம் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 187 ஆகும்.

# பூநகரி விக்கினேஸ்வரா மாணவர்கள் நெருக்கடி

(பூநகரி)

பூநகரி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதன் காரணமாக இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் நான்கு கிலோமீற்றர் தூரம் நடந்து பூநகரி மகாவித்தியாலயத்திற் குச் செல்வதாக பூநகரி கோட்டக் கல்வி அலுவலகர் சு.தர்மரட்ணம் தெரிவித்துள்ளர்.

பூநகரி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதனை அவர் தெரிவித்தார். மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் பாடசாலை இயங்கவில்லை. கடந்த ஆண்டு ஜனவரி மாதம் பாடசாலையை விட்டு விலகுவதாக இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர். பின்பு ஏப்ரல் மாதம் என்றார்கள். காலம் கடந்து செல்கிறது. பூநகரியில் 8 பாடசாலைகள் தற்பொழுது மூடப்பட்டுள்ளன. மாணவர்கள் இல்லாத பாடசாலைகளில் இராணுவ முகாம் அமைந்திருந்தால் பிரச்சினையில்லை. ஆனால் மாணவர்கள் உள்ள பாடசாலை யொன்றில் இராணுவ முகாம் அமைந்திருப்பது மாணவர்களின் கல்விக்கு பெரும் இடையூறாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விரைவில் பாடசாலையை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென இராணுவத்தரப்பில் இதன்போது தெரிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# இராமநாதபுரம் கிழக்கு பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா

(கொழும்பு)

சைல்பண்ட் கொரிய நிறுவனத்தின் ஆதரவுடன் சைல்பண்ட் சிறிலங்கா நிறுவனத்தினர் வட்டக்கச்சி- இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலைக்கு சுமார் 21 இலட்சம் ரூபா செலவில் வகுப்பறைக் கட்டடத்தினையும் நீர் விநியோக வசதிகளையும் சிறுவர் விளையாட்டு முற்றத்தினையும் அமைத்துக் கொடுத்துள்ளனர். இக்கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.




இந்நிகழ்வுகளில் சைல்பண்ட் நிறுவனத்தின் கொரியநாட்டு பிரதிநிதி சான் மி மூன், வலைப்பின்னல் முகாமையாளர் கீர்த்தி கொஸ்வத்தை, ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், சைல்பண்ட் நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் மதிவண்ணன் மற்றும் கல்விசார் அதிகாரிகளும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 4 ஆரம்ப பாடசாலைகளையும் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 4 ஆரம்ப பாடசாலைகளையும் புனரமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பம்பைமடுவில் பற்றைகள் மண்டியுள்ள புற்றுநோய் வைத்தியசாலைக்காணி

(வவுனியா)

வவுனியா- பம்பைமடு பிரதேசத்தில் புற்றுநோய் வைத்தியசாலைக்கான அடிக்கல் நீண்ட காலத்திற்கு முன்னர் நாட்டப்பட்ட நிலையில் எவ்வித செயற்பாடுகளும் நடைபெறாது அடிக்கல் நாட்டப்பட்ட இடம் பற்றைகள் மூடிய நிலையில் காணப்படுகின்றது.

புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்காக பல ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டநிலையில், அமைச்சர்கள் மற்றும் வவுனியா அராசாங்க அதிபரினால் இவ் அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது. எனினும் பல்வேறு காரணங்களால் அவ் வைத்தியசாலை கட்டப்படாது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்தில் புற்றுநோய் தாக்கத்திற்கு உள்ளானவர்கள் தொடர்ச்சியாக யாழ்.வைத்தியசாலைக்கும், மகரகம வைத்தியசாலைக்கும் சென்று சிகிச்சை பெறவேண்டிய சூழல் காணப்படுவதாகவும் தெரியவருகின்றது.

# கோழிகளின் தடிமன் வைரஸ் வியாபாரத்தைப் பாதிக்காது

(குருநாகல்)

குருநாகல் - பிங்கிரிய பகுதி பண்ணையொன்றில், தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒருவகை தடிமன் வைரஸ் கண்டறியப்பட்டமை, கோழி இறைச்சி மற்றும் முட்டை வியாபாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தாது என கால்நடை மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நன்றாக சமைத்த கோழி இறைச்சியை உணவாக உட்கொள்வதாயின், இந்த வைரஸ் குறித்து அச்சமடையத் தேவையில்லை என அமைச்சின் செயலாளர் கே.எம்.ரி.கேதரகம தெரிவித்தார்.

இதேவேளை, பிங்கிரிய பிரதேசத்தில் வைரஸ் கண்டறியப்பட்ட கால்நடை பண்ணைக்கு சுமார் 3 கிலோமீற்றர் தூரத்திற்கு உட்பட்ட சகல கோழிப் பண்ணைகளையும் விசேட பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இந்தப் பண்ணைகளிலுள்ள அனைத்து கோழிகளினதும் இரத்த மாதிரிகளைப் பெற்று இரசாயன ஆய்வுக்கூட பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளதாக அமைச்சின் செயலாளர் கூறினார்.

# புழுதி மண்டலமாகும் பழைய கண்டிவீதி; புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

வீதிகளின் புனரமைப்பிற்கென இரணைமடு காட்டுப்பகுதியிலிருந்து டிப்பர் வாகனங்களில் இரவு பகலாக பெருமளவு கிரவல் மண் வட்டக்கச்சி பிரதேசத்தின் ஊடாக கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக எடுத்து செல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது.



இதனால் இப்பிரதேசத்தின் பிரதான வீதிகளை சூழவுள்ள பகுதிகள் கிரவல் மண் தூசிகளால் சீரழிந்துபோயுள்ளன. குறிப்பாக இராமநாதபுரத்தின் பழைய கண்டிவீதியில் சுமார் இரண்டரைக் கிலோ மீற்றர் தூரப்பகுதி பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது.

குறித்த இரண்டரை கிலோ மீற்றர் தூர வீதியின் ஓரத்தில் மூன்று முன்பள்ளிகள், ஒரு தாய்சேய் சிகிச்சை நிலையம், இரு பாடசாலைகள், உபதபாலகம், கோவிலகள், தேவாலயங்கள், வர்த்தக நிலையங்கள், கூட்டுறவுச் சங்க கிளைகள், அரிசி ஆலைகள், உணவகங்கள், பெருமளவு வீடுகள் என்பன அமைந்துள்ளதோடு பொலிஸ் காவல் பிரிவு அலுவலகமும், கிராம சேவையாளர் அலுவலகமும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

டிப்பர் வாகனங்களின் தொடர்ச்சியான ஓட்டத்தினால் பிரதான வீதி கிடங்கும் பள்ளமுமாக மாறியுள்ளது.

வாகனங்களால் எழும்பும் புழுதி மண்டலத்தால் வீதியின் இருமருங்கிலும் சுமார் ஒரு கிலோ மீற்றருக்கும் அதிக தூரத்திற்கு உள்ள சுற்றாடல் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது. இதனால் சிறார்கள் முதல் பெரியவர்கள் வரை சுகாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர். பாடசாலைபிள்ளைகளின் வெள்ளை உடைகள் செந்நிறமாக காட்சியளிக்கின்றன. முன்பள்ளியில் பயில்கின்ற பிள்ளைகளும் தாய் சேய் சிகிச்சை நிலையத்திற்குச்செல்லும் கர்ப்பிணித தாய்மார்களும்,குழந்தைகளும் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இவ்வீதியில் உள்ள வீடுகளுக்குள் கிரவல்தூசு உட்செல்வதால் அன்றாடம் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் உணவுப்பொருட்களைப்பாதுகாத்துக்கொள்ள முடியாதவாறு வீட்டுக்குடியிருப்பாளர்கள் பெரும் அவதிக்கும் உள்ளாகின்றனர். அத்தோடு, குடிநீர்க் கிணறுகள் அனைத்தும் மண்தூசுகளால் அசுத்தமடைந்து காணப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வடக்கு ரயில் பாதைகளில் கண்ணிவெடி அகற்றல்

(வவுனியா)

வடக்கிற்கான ரயில் சேவையை ஆரம்பிக்கும் முகமாக ரயில் தண்டவாளம் அமைக்கப்படும் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. வவுனியா, ஓமந்தை ரயில் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் வரையில் சுமார் 138 கிலோமீற்றர் தூரம் வரையிலான ரயில் வீதியிலுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. இதில் சுமார் 63 கிலோமீற்றர் தூரம் வரையில் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.



இந்நிலையில், நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள பிரதேசங்களில் ரயில் தண்டவாளங்களை அமைத்து ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப் பதற்கான பணிகளை இந்திய நிறுவனம் முன்னெடுத்துள்ளது. இந்திய நிறுவனமொன்றைச் சேர்ந்த பணியாளர்களால் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

# வடமாகாண வர்த்தகர்களின் வரிப் பிரச்சினைக்குத் தீர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள வர்த்தகர்களும், விநியோகஸ்தர்களும் எதிர்நோக்கும் வரி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் தயாராகவுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடமாகாண விநியோகஸ்தர்களுக்கான கலந்துரையாடல் வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலுள்ள திணைக்களத்தில் நடைபெற்றது.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் பா. சிவாஜி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சீமெந்து, அங்கர் மற்றும் ஏனைய பொருட்களின் விநியோகம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. சீமெந்து விற்பனை மூலம் வரி செலுத்துவதில் இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பாக சில முடிவுகள் எடுக்கப்பட்டது.

வர்த்தகர்கள் தமது தேவையற்ற போட்டிகளைத் தவிர்த்து வரிகளை நியாயமான அளவு செலுத்த வேண்டும் எனவும் உடன்பாடு எடுக்கப்பட்டது.

சீமெந்து விநியோகத்தால் தமக்கு ஏற்படும் தேவையற்ற போட்டிகளைத் தவிர்ப்பதற்கு விநியோகப் பகுதியிடம் அவற்றைப் பிரித்துக் கொடுக்கும்படி யாழ், கிளிநொச்சி முகாமையாளர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

மூன்று மாவட்டங்களையும் சேர்த்து மாதத்தில் 4 இலட்சம் சீமெந்து பைக்கற்றுக்கள் விற்பனை செய்யப்படுவதுடன், 11 ஆயிரம் அங்கர் பைக்கற்றுக்கள் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர் கருத்து தெரிவிக்கையில், மொத்த வர்த்தகம் சில்லறை வர்த்தகமானாலும் மருந்துப் பொருட்கள் தவிர ஏனைய பொருட்களுக்கு ஒரு வீதம் தேசத்தை கட்டியெழுப்புதவற்கான வரியைச் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் தெரிவிக்கையில்,

வர்த்தகர்கள் சீமெந்து தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் டோக்கியோ சீமெந்துக் கம்பனி மாகாண முகாமையாளருடன் கலந்துரையாடி தீர்வைப் பெற்றுக்கொடுக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

திணைக்கள பிரதி ஆணையாளர் மீண்டும் தெரிவிக்கையில்,

கடந்த 2 வருடங்களாக யாழ்.பிராந்திய அலுவலகம் வருமான வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, விருப்பத்திற்குரிய பெறுதி சேர் வரி ஆகிய வரிகள் ஒவ்வொரு வரிச் சங்கங்களூடாக அறவிடப்படுகின்றது. அவற்றை பொறுப்புள்ளவர்கள் தாமதமின்றிச் செலுத்த வேண்டும். தாமாக முன்வருவோரிடம் கட்டண விபரங்கள் கேட்கப்பட மாட்டாது. ஆகவே விநியோகஸ்தர்கள், வர்த்தகர்கள் வீரசிங்கம் மண்டபம் 3 ஆம் மாடியிலுள்ள மேற்படி திணைக்களத்திற்கு வருகை தந்து வரி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். கடந்த ஆண்டு தலைமையகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வரி இலக்கு அடைந்துள்ளமைக்கு ஒத்துழைப்பு வழங்கிய வர்த்தகர் கள், பொதுமக்கள் ஆகியோருக்கு நன்றிகளையும் ஆணையாளர் இதன்போது தெரிவித்தார். (எஸ்)

## 'சுதந்திர வார' குழந்தைக்கு மக்கள் வங்கியின் இலவச வைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கி இலவச வைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் கீழ் பெப்ரவரி முதலாம் திகதி முதல் ஏழாம் ஆம் திகதி வரை பிறக்கும் குழந்தைகளுக்கு மக்கள் வங்கி 500 ரூபாவினை இலவசமாக வைப்பிலிட்டு "இசுறு உதான" சிறுவர் கணக்குகளை ஆரம்பித்துக் கொடுக்கின்றது.

இத்திட்டத்திற்கு ஏற்புடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்குச் சென்று இச்சேவையைப் பெற முடியும். (54)

## ஆசிய விளையாட்டு விழா இலங்கையில் ஏற்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு ஆசிய இளையோர் விளையாட்டு போட்டியை இலங்கையில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளன. இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கியுள்ளார். இப்போட்டிகளை நடத்த வேறு எந்த நாடுகளும் இதுவரை முன்வராததால் இலங்கை போட்டியின்றி அதனை நடத்தக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கும்பாபிஷேகம்

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்கு திருவருள்மிகு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கோவில் புனருத்தாரண பிரதிஷ்டா மஹா கும் பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற வுள்ளது.

அன்று காலை 6.28 மணி முதல் 7.50 மணி வரை வரும் சுப வேளையில் விநாயப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கடந்த திங்கட்கிழமையிலிருந்து கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நாளை சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தல் இடம் பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (137)

## இளம்....

என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரணமானதாகவும் மேலும் தெரியவருகிறது.

இவரது சடலம் நேற்று சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## மாணவன் சடலமாக ...

கிணற்றடியிலிருந்து திரும்பாததைத் தொடர்ந்து சகோதரன் கிணற்றடி சென்று பார்த்த போது அங்கு ஒற்றைப் பாதணி மட்டுமே காணப்பட்டுள்ளது. சந்தேகம் கொண்ட சகோதரன் கிணற்றை அவதானித்த போது சகோதரன் கிணற்றில் வீழ்ந்து கிடப்பது தெரிய வந்ததாகவும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கோப்பாய் பொலிஸாரின் உதவியுடன் சடலம் மீட்கப்பட்டு கோப்பாய் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குப் பின்னர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சடலம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டனர். (பா)

## காங்கேசன்...

இக்குண்டு அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து பலாலியிலுள்ள இராணுவ படைத் தலைமையகத்திற்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினரின் பொறியியல் பிரிவினர் உடனடியாகக் குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்து குண்டை வெடிக்காத நிலையில் மிகவும் அவதானமாக மீட்டுள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியம் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்து பதினாறு வருடங்கள் கடக்கும் நிலையில் இக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்குண்டு வெடிக்காதமையினால் பல உயிர்கள் தெய்வாதீனமாக பாதுகாக்கப்பட்டு பெரும் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியரொருவர் தெரிவித்தார்.

## தெரிவுக்குழுவில்...

இருப்பது தவிர்க்க முடியாததும் அவசியமானதும் என்ற போதிலும் இங்கு அக்கருத்துக்கள் முறைகேடாகவும் அவசியமற்ற முறையில் அவதூறாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நாம் அதிகாரப் பரவாலாக்கல் என்றில்லாமல் தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வைப் பற்றியே அரசுடன் பேசி வருகிறோம். 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தொடங்கி அதிலிருந்து கட்டம் கட்டமாக முன்னேற முடியும் என்றும் வலியுறுத்தி வருகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கையற்ற நிலையிலேயே அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை காண்பதற்கு அவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் தடையாக உள்ளன. பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினையாக தொடர்ந்து வைத்திருப்பதன் மூலம் தமது சுயலாப அரசியலை முன்னெடுக்கவே அவர்கள் விரும்புகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியும் எனவும் அந்த வகையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசில் தமக்கு மிகுந்த நம்பிக்கையுள்ள தாகவும் இறுதி யுத்தத்தை தடுத்து நிறுத்தி மக்கள் எதிர்கொள்ளப் போகும் பேரழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு அரசுடன் பேசுவோம் வாருங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தாம் அழைப்பு விடுத்ததையும் அதனை அவர்கள் நிராகரித்ததையும் பின்னர் நடைபெற்ற அழிவு யுத்தத்தையும் இதன்போது அமைச்சர் நினைவுகூர்ந்தார்.

முன்னைய காலங்களை விடவும் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினை விடயத்தில் அக்கறை கொண்டுள்ள போதிலும் இவ்விடயத்தில் இந்தியா கொண்டுள்ள அக்கறை முக்கியமானது இச்சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்வது புத்திசாலித்தனமானது எனவும் இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த 10,000 க்கும் மேற்பட்ட புலி உறுப்பினர்களில் பெருமளவானோர் புனர்வாழ் வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையோரும் நிச்சயம் விடுவிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதான வீதியூடாக மங்கள வாத்தியம் சகிதம் பிரதம விருந்தினர் உள்ளிட்ட விருந்தினர்கள் நிகழ்விடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு பெயர்ப்பலகையும், நினைவுக் கல்லும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்டடத்தையும் அவர் திறந்து வைத்தார். மண்டபத்தில் ஊர்காவற்துறை பிரதேசசபை தவிசாளர் ம. ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கௌரவ மற்றும் சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றினர். தொடர்ந்து ஊர்காவற்துறை பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களும், புதிய கட்டடத்தின் கட்டுமானப் பணிகளின் பொறியியலாளர்கள் மற்றும் தற்போதைய தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

## ஜெனீவா கூட்டத்...

ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தநிலையில், இந்தியாவின் ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் மேற்குலக நாடுகள் ஈடுபட்டிருப்பதாக புதுடெல்லித் தகவல்கள் கூறுகின்றன. இதன் ஒரு கட்டமாக நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைக்கான சிறப்பு சமாதான தூதுவராக பணியாற்றியவருமான எரிக் சொல்ஹெய்ம் புதுடில்லி சென்றுள்ளார்.

அவர் இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பு அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடத்தி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதே வேளை, அமெரிக்கா தரப்பில் சில உயர்மட்டப் பிரதிநிதிகள் புதுடெல்லி செல்லும் வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிகிறது. இந்தநிலையில் இலங்கை அரசாங்கம் இந்தியாவின் ஆதரவைத் தக்க வைப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளது.

ஏற்கனவே கடந்த மாதம் 24 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குறுகிய பயணம் ஒன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்று திரும்பியி ருந்தார். அடுத்து அவர் ஆபிரிக்க நாடுகளுக்கான பயணத் திட்டம் ஒன்றைக் கொண்டுள்ள போதும், அவர் மீண்டும் புதுடில்லிக்குச் சென்று பேச்சுக்களை நடத்தும் வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது.

அதேவேளை, இக்கூட்டத் தொடரில் இலங்கை அரசு தனது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதா? இல்லையா? என்பது குறித்து இன்னமும் இறுதி முடிவு எதனையும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்.கொட்டடியில்...

620 கிராம் நிறையுடைய நான்கு ஹெரோயின் பைக்கட்டுக்களை தன்வசம் வைத்திருந்த மேற்படி இளைஞனை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

கொட்டடி லைடன் புடைவைத் தொழிற்சாலைக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். இவர் நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் பொலிஸாரினால் ஆஜர்படுத்தப்பட்டார்.

மேற்படி வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குற்றவாளியை எதிர்வரும் 16 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (எஸ்)

## முஸ்லிம்களுக்கு...

காங்கிரஸ் எதிர்க்காது.

ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் கட்டுப்பாட்டில் உள்ளதும் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கின்றதுமான திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் பொத்துவில் சம்மாந்துறை, கல்முனை போன்ற பிரதேசசபைகளை ஒருங்கிணைத்து தென்கிழக்கு மாகாணசபையை உருவாக்குவது என்ற நிபந்தனை அடிப்படையிலேயே அரசுக்கு ஆதரவு வழங்கப்படும். இந்த மாகாணசபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். இந்தவிவகாரம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரைவில் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தப் போகிறது.

தென்கிழக்கு மாகாணசபை அமைக்கப்படுவது அங்குள்ள மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் என்று நம்புவதாகவும் ஹசன் அலி மேலும் தெரிவித்துள்ளார்.

# தீவகத்தில் திராட்சை பயிர்ச்செய்கை



தீவகப் பிரதேச விவசாயிகளுக்கான பல்வேறு தரப்பட்ட பயிர்ச் செய்கைக்கான ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்க ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் தயாராகவுள்ளோம என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

திராட்சைக் கொடியின் குருத்துப் பகுதியினை முறிக்கும் நிகழ்வினை ஆரம்பித்து வைத்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தீவகப் பிரதேசமானது வளம் பல நிறைந்த பிரதேசமாகக் காணபடுகின்றது. தீவகத்தின் வேலனைப் பிரதேசம் சிறப்புமிக்க விளைநிலப் பிரதேசத்தைக் கொண்டதாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தில் பல ஆண்டுகளுக்கு பின்னர் விவசாயி ஒருவர் மேறகொண்ட திராட்சைக் கொடி வளர்ப்பானது விவசாயிகள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இத்திராட்சை பயிர்ச்செய்கையானது எமது இளைஞர் யுவதிகளின் வேலை வாய்ப்பிற்கு உந்து சக்தியாக இருக்குமெனவும் எதிர்காலத்தில் மேற்படி பயிர்ச்செய்கையினை விருத்தி செய்ய உள்ளதாகவும் கமலேந்திரன் (கமல்) மேலும் தெரிவித்தார். திராட்சைப் பயிற்செய்கை வெற்றியளித்துள்ளதுடன் இவ்விவசாயியானவர் திராட்சைப் பயிருடன் தக்காளி, மிளகாய், பயறு, வெற்றிலை போன்ற ஊடு பயிர்ச் செய்கையையும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிராமிய குளங்கள் புனரமைப்பு மண்டைதீவில் புதிய திட்டம்

யாழ். விவசாய திணைக்களமும், ஐ.ஓ.எம். நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளை நிறுவனமும் ஒன்றிணைந்து மண்டைதீவு கிராமத்தின் கிராமிய குளங்களைத் திருத்தும் ஆரம்பகட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். கிராமத்தின் தென்பகுதியில் உள்ள பெரியகுளம், சின்னக்குளம், கிராஞ்சிக்குளம் ஆகிய மூன்று குளங்களும், இவற்றை இணைக்கும் கால்வாயும் முதல் கட்டமாகத் திருத்தம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


புகையிலைத் தோட்டங்கள் நெல்வயல்கள் என்பவற்றுக்கு வரட்சிக்காலத்தில் நீர் பாய்ச்சுவதற்கும், கிராமியத் தேவைகளுக்குக் கோடைகாலத்திலும் இந்தக் குளங்கள் முன்பு பயன்பட்டு வந்தன. இவற்றை ஆழமாக்கிச் செப்பனிடுவதன் மூலம் நிலத்தடி நீர் வளத்தையும் பேண முடியுமென எதிர்பார்க்கப்படுவதாக மண்டைதீவின் கமக்காரர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக புனர் நிர்மாணம் செய்யப்படாது தூர்ந்துபோய் இருக்கும் சம்புக்குளம், பனையடிக் காட்டுக்குளம் மேற்கே ஜெயசிங்கம் தோட்டப்பகுதியில் உள்ள குளம் போன்றவற்றையும் புனரமைக்கவேண்டிய தேவை இருப்பதாகவும் இது தொடர்பாக விவசாய, கமநல மற்றும நீரியல்வளத் திணைக்களங்களின் கவனத்திற்கு கொண்டுவந்து இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (23)

# பிறப்பு அத்தாட்சி வழங்கப்பட்டது

மன்னார் மாவட்டத்தில் பிறப்பு அத்தாட்சி பத்திரம் இல்லாத 111 பேருக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிகழ்வு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்து இந்தியாவில் வாழ்ந்து வந்த காலப்பகுதியில் பிறந்த பிள்ளைகளுக்கு இந்த பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நீண்ட காலமாக பிரஜா உரிமை பெறுவதில் இவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கைப் பெண்கள் குவைத்தில் ஏலத்தில் விற்பனை



(கொழும்பு)

குவைத் நாட்டுக்கு வேலை வாய்ப்புக்காகச் செல்லும் இலங்கைப் பணிப்பெண்கள், அந்நாட்டு எஜமானர்களினால் விபசாரத்துக்காக ஏலம் விடப்படுகின்றனர் என்று அங்கிருந்து நாடு திரும்பிய பணிப் பெண்களில் சிலர் தெரிவித்தனர்.

குவைத்தின் பரவேலியா, ஹவாலி, ஜஹாரா மற்றும் பானெல் போன்ற நகரங்களிலேயே இலங்கைப் பெண்கள் ஏலம் விடப்படுகின்றனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். குறித்த நகரங்களில் இலங்கைப் பெண்களை கதிரைகளில் அமரச்செய்து 500 முதல் 800 வரையான குவைத் தினார்களுக்கு (சுமார் இரண்டரை முதல் 3 இலட்சம் ரூபா) அவர்களை ஏலம் விடுவதாக மேற்படி நாடு திரும்பியோர் குழு தெரிவித்தது. குவைத் மற்றும் சவூதி அரேபிய எஜமானர்களின் துன்புறுத்தல்களுக்கு உள்ளான நிலையில் தடுப்பு முகாம்கள் மற்றும் விடுதிகளில் தங்கவைக்கப்பட்டிருந்த 40 இலங்கைப் பணிப் பெண்கள் உட்பட 125 பேர் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர். இவ்வாறு நாடு திரும்பியவர்களே குவைத்தில் பணிப்பெண்கள் ஏலம் விடப்படுவதாகத் தெரிவித்தனர்.

# வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருகை

இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு இலங்கை வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 100 பேர் கொண்ட குழுவினர் 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர். இக்குழுவினர் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற மீள் குடியேற்றம் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கவுள்ளதாகவும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (எஸ்)

# கூட்டி விற்றது ஒரு ரூபா கட்டியது 15 ஆயிரம்

யர்ழ். நகர்ப்பகுதியில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாகப் பொருட்களை விற்பனை செய்த 3 வர்த்தகர்களுக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது. பாவனை அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட வழக்கில் 27 ரூபா விறகப்படவேண்டிய பனடோல் காட்டினை 28 ரூபாவிற்கு விற்பனை செய்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபாவும், 32ரூபா மற்றும் 35ரூபா விற்கப்பட வேண்டிய குளிர்பானத்தினை 40 ரூபாவிற்கு விற்பனை செய்தமைக்காகவும், விலைப்பட்டியல் இன்றி விற்பனை செய்த குற்றத்திற்காகவும் இரு வர்த்தகர்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறும் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (எஸ்)

# தீர்வு இன்றி தொடர்கிறது யாழில் மருத்துவர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் வைத்தியர், தாதியர் பற்றாக்குறை தொடர்ந்தும் இருந்துவருவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்துச் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தபோதும் அதற்கு முன்னதாகவும் தாம் எடுத்துக் கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த வருட இறுதியில் யாழ். மாவட்டத்திற்கு ஒரு தொகுதி வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் சுகாதார அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். இருந்தும் இம் மாவட்டத்திற்கான வைத்தியர் தாதியர் பற்றாக்குறையை அந்நியமனங்கள் பூர்த்திசெய்யவில்லை. மேலும் வைத்தியர், தாதியர்களை நியமனம் செய்யவேண்டிய தேவை இருப்பதாகவும் தாம் சுகாதார அமைச்சரிடம் வலியுறுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை யாழ். "ரில்கோ" ஹோட்டலில் நடைபெற்ற மூன்று நாள் மருத்துவர் சங்க மாநாட்டிலும் இவ்விடயம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன் இதற்கான ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (பா)

# நீதிமன்ற அபராதங்கள்

இணுவில் பகுதியில் விலைப்பட்டியல் இன்றி சீனி விற்பனை செய்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

*** *** ***

ஆஸ்பத்திரி வீதிப் பகுதியில் விலைப்பட்டியல் இன்றி பிளாஸ்ரிக் கோப்பை விற்பனை செய்த நபருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

*** *** ***

இணுவில் பகுதியில் வர்த்தக நிலையமொன்றில் 60 ரூபா விற்கப்படவேண்டிய குத்தரிசியை 65 ரூபாவிற்கு விற்பனை செய்தமைக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

*** *** ***

நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் வர்த்தக நிலையமொன்றில் 35 ரூபா விற்கவேண்டிய குளிர் பானத்தை 40 ரூபாவிற்கு விற்பனை செய்தமைக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

# இடமாற்றத்தை எதிர்த்து சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம்



கொழும்பு நீதவான் நீதிமன்ற கட்டடத் தொகுதியை பத்தரமுல்லை பிரதேசத்துக்கு இடமாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், இடமாற்றும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிராக நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நேற்று வியாழக்கிழமை பிற்பகல் கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இச்சந்திப்பில் நீதியமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா, இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவர் ஷப்லி அஸீஸ் மற்றும பொது செயலாளர் மஹிந்த லொக்குகே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கொலன்னாவையில் இளைஞர் கடத்தல்

கொலன்னாவை நகர சபைத் தவிசாளரின் சகோதரர், ஜனாக பிரபாத் (வயது - 30) என்பவர் வானில் வந்த குழுவொன்றினால கடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். மீதொட்டுமுல்லவிலுள்ள குப்பை கொட்டப்படும் இடத்திற்கு முன்னால் வைத்து நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# சட்டத்தரணி வேடத்தில் பெண்களை ஏமாற்றியவர் கைது

(கொழும்பு)

மணம் முடிப்பதாகக் கூறி யுவதிகளை ஏமாற்றி சுமார் 60 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணம் மற்றும் தங்க ஆபரணங்களை மோசடி செய்ததாகக் கூறப்படும் ஒருவர் கேகாலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டத்தரணி என்ற போர்வையில் சந்தேகநபர் போலி அடையாள அட்டையைப் பயன்படுத்தி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் 35 யுவதிகளை ஏமாற்றி மோசடியில் ஈடுபட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் கலிகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் எனத் தெரியவந்துள்ளது. நுவரெலிய நீதவான் நீதிமன்றத்தில் மேற்படி நபர் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து சந்தேகநபரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 03 ஆம் திக்தி அச்சிட்டு வெளியிடப்பட்டது.